Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 23 திங்கட்கிழமை (06.04.2015) பக்கங்கள் 20 ஓசை – 188

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

# பெண்கள் புனர்வாழ்வுக்காக வடக்கில் தேசிய நிலையம்

## கிளிநொச்சியில் அமைக்க முடிவு

(கிளிநொச்சி)

பெண் தலைமைத்துவ குடும்பங்களை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்புவதற்கான தேசிய நிலையத்தை கிளிநொச்சியில் அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பிரதமர் அலுவலகம் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு, யுத்தம் காரணமாக குடும்பத் தலைவனை இழந்த பெண்கள் அதிகமாக கிளிநொச்சியை அண்டிய பிரதேசங்களில் வாழ்வதனால் அங்கு இவ்வாறான நிலையமொன்றினை ஸ்தாபிக்குமாறு வட பகுதி மக்கள் வேண்டிக் கொண்டமைக்கு அமைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

யுத்தம் காரணமாக பெண்கள் மற்றும் பிள்ளைகளே நிர்க்கதிக்குள்ளாகின்றார்கள் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. வட பகுதியில் மாத்திரம் பெண்கள் தலைமைத்துவம் வகிக்கும் குடும்பங்கள் சுமார் 50000 காணப்படுகின்றன.

எந்தவிதமான வருமானத்திற்கும் வழியில்லாத காரணத்தினால் உணவு, பிள்ளைகளின் கல்வி போன்ற அடிப்படை

19 ஆம் பக்கம் பார்க்க

## டெங்கு ஒழிப்புக்கு ஒத்துழைப்பு



(யாழ்ப்பாணம்)

உயிர்க்கொல்லி நோயான டெங்கை யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடபகுதியில் முற்றாக ஒழிப்பதற்கும், நோய்த்தாக்கத்திலிருந்து மக்களை காப்பாற்றுவதற்கும், மருத்துவத்துறை சார்ந்தோர் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

டெங்கு நோய்த்தாக்கம் நாட்டில் பல பாகங்களைச் சேர்ந்த மக்களுக்கு பேராபத்தை ஏற்படுத்தி வரும் நிலையில் இந்நோய்க்கு இலக்காகி கடந்த காலங்களில் பலர் உயிரிழந்ததுடன், பலர் பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளார்கள்.

இந்நிலையிலேயே டெங்கை ஒழிக்கும் முகமாக அரசின் விசேட பணிப்புரைக்கு அமைவாக டெங்கு ஒழிப்பு வாரம் நாடளாவிய ரீதியில் ஒருவார காலம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனொரு பகுதியாகவே யாழ்ப்பாணத்தில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த நிலையில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய சூழல்களை வைத்திருப்போர் இனங்காணப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

**எனவே குறித்த நாட்களில்**

19 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி, எதிர்வரும் ஜூன் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

1982 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஒருவர் இலங்கை வருகிறார் என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று இலங்கை வெளிவிவகார



அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி மைத்திரிபால

19 ஆம் பக்கம் பார்க்க

## புளியம்குளத்தில் விபத்து; ஸ்தலத்தில் சிறுமி பலி

(வவுனியா)

வவுனியா, புளியங்குளம், இராமர்புளியங்குளம் பகுதியில் ஆட்டோவும் பிக்கப் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் முச்சக்கர வண்டியில் பயணித்த ஒன்றரை வயதுச் சிறுமி உயிரிழந்ததுடன், சிறுமியின் தாயும் தந்தையும் ஆட்டோ சாரதியும் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம் பெற்றது. வவுனியாவிலிருந்து புளியம்குளம் நோக்கிப் பயணித்த ஆட்டோவும் எதிரே வந்த பிக்கப் ரக வாகனமும் புளியங்குளம், இராமர்புளியங்குளம் பகுதியில் ஏ-9 வீதியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இதன்போது ஆட்டோவில் பயணித்த ஒன்றரை வயதுச் சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், சிறுமியின் தாயும், தந்தையும், ஆட்டோ



சாரதியும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். சிறுமியின் சடல

19 ஆம் பக்கம் பார்க்க

## கடலில் மூழ்கி இளைஞன் மரணம்

(புத்தூர்)

தொண்டைமானாறு, அக்கரைப்பகுதியில் கடலில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். புத்தூர் பகுதியைச் சேர்ந்த கருணானந்தன் மிதுலன் (வயது 22) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் தனது நண்பனின் பிறந்ததின நிகழ்வினைக் கொண்டாடுவதற்காக நண்பர்கள் பலருடன் மாலை வேளையில் புத்தூரிலிருந்து அக்கரை கடற்பகுதிக்கு வந்துள்ளனர்.

பின்னர் கடலில் இறங்கி குளித்துவிட்டு கேக் வெட்டுவதற்காக அனைவரும் கூடியபோது

19 ஆம் பக்கம் பார்க்க

## படைவீரர் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கந்தசுவாமி ஆலயத்துக்கு பின்புறமாகவுள்ள படைமுகாமில் இயங்கும் 58 ஆவது இராணுவ படைப் பிரிவில் பணியாற்றும் இராணுவ சிப்பாய் ஒருவரின் சடலம் நேற்றுக காலை மீட்கப்பட்டது என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவிததனர்.

காலியைச் சேர்ந்த எச்.எஸ். மதுசங்க (வயது - 25) என்ற சிப்பாயின் சடலமே மீட்கப்பட்

19 ஆம் பக்கம் பார்க்க

## மைத்திரி பாகிஸ்தானில் ஆறு ஒப்பந்தங்கள் இன்று

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று மதியம் பாகிஸ்தானைச் சென்றடைந்துள்ளார். மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று பாகிஸ்தான் சென்ற ஜனாதிபதியை கராச்சி விமான நிலையத்தில் சிந்த் மாகாண முதல்வர் செய்ட் குவைம் அலி ஷா வரவேற்றுள்ளார்.

தற்போது இஸ்லாமாபாத் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரியை பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் வரவேற்பளித்துள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாகிஸ்தானில் ஆறு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்கு திட்டமிட்டுள்ளதாக, இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் எயார் சீப் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி தெரிவித்துள்ளார். ஜனாதி

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.நகரில் நாளை குடிநீருக்கான பேரணி

### கழிவு ஒயில் கசிவு விவகாரம் விஸ்பரூபம்

(யாழ்ப்பாணம்)

குடிநீரில் கழிவு ஒயில் கலந்தமை தொடர்பான விவகாரம் இப்போது விஸ்பரூபம் எடுத்துள்ளது.

கழிவு நீர் மாசடைதலினால், பல்வேறு தரப்பினரிடமும் உதவிக்காக அணுகிய போது, குறைந்த பட்ச ஜனநாயக உரிமை கிடைக்கவில்லை எனக் கோரி மக்கள் பேரணி ஒன்றினை மேற்கொள்ள தீர்மானித்துள்ளனர்.

தூய நீருக்கான பாதிக்கப்பட்ட மக்கள் ஒன்றியம் மற்றும் இயற்கை மற்றும் சுற்றுச் சூழல்

19 ஆம் பக்கம் பார்க்க

# இம்மாதம் 8 ஆம் திகதி முதலாம் தவணை விடுமுறை

2015 ஆம் ஆண்டில் பாடசாலைகளிற்கான முதலாம் தவணைப் பரீட்சைகள் நிறைவடைந்துள்ள நிலையில் எதிர்வரும் 8 ஆம் திகதி பாடசாலைகளில் முதலாம் தவணை விடுமுறைக்காக மூடப்படவுள்ளன.

ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி 2 ஆம் தவணை கற்றல் நடவடிக்கைக்காக பாடசாலைகள் திறக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

(66)

# மாணவர்களை வழிநடாத்துவது பெற்றோரின் கடமையாகும்

## உதவிக் கல்விப்பணிப்பாளர் கைலாசநாதன்

(யாழ்ப்பாணம்)

மாணவர்களை வழிநடத்துவது பெற்றோருடைய மிக முக்கியமான கடமையாக விளங்குகின்றது. இதற்கு பாடசாலை ஆசிரியர்கள் வழிகாட்டிகளாக விளங்க வேண்டும். மாணவனை பூரணத்துவமுடையவனாக மாற்ற வேண்டிய பொறுப்பு பெற்றோரையே சாரும்.

சிறுவயதில் இருந்தே கல்வியறிவு ஆளுமை விருத்தியுடன் கூடியவர்களாக வளர்க்க வேண்டிய பொறுப்பு பெற்றோரையே சாரும் என வடமாகாண முறைசாரா கல்விப்பிரிவின் உதவிக் கல்விப்பணிப்பாளர் ச.கைலாசநாதன் தெரிவித்தார்.

இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம் ஆகியவற்றின் 13 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் வழங்கலும் இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் பொது நூலகத்தலைவர் ச.சிவசங்கர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது, அந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். எழுத்தறிவித்தவன் இறைவன். அதற்கு ஏற்றாற்போல் முன்பள்ளிகளும் தமது செயற்பாட்டை செயற்றிறன் மிக்கதாக ஆக்கிக்கொள்ள வேண்டும். நூலகமானது முன்பள்ளியில் இருந்து முதியோர் கல்வி வரை கற்கக்கூடிய அமைப்பாக விளங்குகின்றது.

ஏ - 9 வீதி திறக்கப்பட்டதன் பிற்பாடு பல புதிய விடயங்கள் எம்மிடையே வந்து சேர்ந்துள்ளன. இவ்வாறான பல புதிய விடயங்கள் பாடசாலை மாணவர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. பல புதிய விடயங்கள் உயர்தர மாணவர்களிடையே குறுக்கீடுகளை ஏற்படுத்தியுள்ளன.

மாணவர்கள் படிப்பதற்கான ஏதுவான சூழ்நிலையை பெற்றோர் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். ஒவ்வொரு பெற்றோருக்கும் மாணவர்கள் கற்கின்ற போது பாதுகாப்பாக இருந்து வழிநடத்த வேண்டிய பொறுப்பு உண்டு.

தமது பிள்ளைகள் கற்கின்ற இடத்திற்கு பெற்றோர் கட்டாயம் செல்லும் நடைமுறை வெளிநாடுகளில் உண்டு. பிள்ளைகளை உற்சாகமூட்டும் வகையான செயற்பாடுகளை பெற்றோர் மேற்கொள்வார்கள். இவ்வாறான நிலை எமது பிரதேசங்களிலும் உருவாக வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் கணனிக் கற்கைநெறி முக்கியமானதாக விளங்குகின்றது. ஆரம்ப பிரிவில் இருந்து உயர்தரம் வரை கணனிக் கற்கையும் அதன் அறிவும் அவசியமானதாக விளங்குகின்றது.



கணனி அறிவும் பயிற்சியும் அனைவருக்கும் அவசியமானதாக விளங்குகின்றது. நவீன தொழில்நுட்பத்துக்கு சவால் விடும் வகையில் வாழப் பழகுவதற்கும், நவீன உலகியலோடு இசைவாக்கம் அடைவதற்கும் கணனி அறிவு அவசியமானதாகின்றது.

மாணவர்கள் சுயமாகக் கற்க வேண்டும். சுயகற்றலே ஆளுமையுள்ள பூரணத்துவமான மாணவனை உருவாக்க முடியும். யாழ்ப்பாணம் கலை கலாசாரத்துக்கு வேரூன்றிய மண். இவ்வாறான மண்வாசனையுடன் அறிவாலயங்களின் ஊடாக சிறந்த வாழ்க்கையையும் கல்வியறிவுடன் கூடிய வாழ்க்கையும் எதிர்கால இளம் தலைமுறையினராகிய எமது மாணவச் செல்வங்கள் பெற்றுக் கொள்வதற்கு பெற்றோருடைய பங்கு மிக அவசியமானதாக விளங்குகின்றது என்றார்.

# வவுனியாவில் மாணவர்களுக்கு ஆங்கில மொழி உச்சரிப்பு பயிற்சி



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்கான விசேட உச்சரிப்பு செயலமர்வு "என் சொப்ற்"நிறுவனத்தின் ஏற்பாட்டில் சுவர்கா விடுதியில் அண்மையில் நடைபெற்றது.

வவுனியா மாவட்டத்தில் ஆங்கில மொழி கற்றுக்கொண்டிருக்கும் 90 மாணவர்களுக்கு விசேடமான முறையில் பிரிட்டிஸ் ஆங்கில உச்சரிப்புக்கள், மற்றும் உச்சரிப்பு குறியீடுகள் போன்ற தெழிவான விளக்கங்களுடன் ஆங்கில ஆசிரியர் சுதாகரனின் நெறியாள்கையுடன் கூடிய வளப்பகிர்வுடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

வெறுமனே வழப்பகிர்வுடன் நின்றுவிடாமல் மாணவர்களின் உச்சரிப்புத்திறனை வளர்த்து வெளிக்கொனரும் முறையில் செயல்முறையும் நடைபெற்றது.

முற்றிலும் கணனி மயப்படுத்தப்பட்ட மிகவும் இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் இச் செயலமர்வு நடைபெற்றது.

குறித்த செயலமர்வில் மூத்த ஆங்கில ஆசான் சுதர்சன் மற்றும் என் சொப்ற் நிறுவனர் சுதாகரன், கார்த்திகா, மகாலிங்கம் சஜீவ், அச்சுதன், சகிதம் ஐ.எல். ரி. எஸ், பீ2, பீ1, மாணவர்கள் உட்பட அடிப்படை ஆங்கிலக்கற்கை நெறியில் கல்விகற்றுக்கொண்டிருக்கும் மாணவர்கள் அடங்கலாக 90 பேர் கலந்து கொண்டு ஆங்கில உச்சரிப்பு திறனை மேம்படுத்திக் கொண்டனர்.

# DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | திங்கட்கிழமை |
|---|---|
| AM 05.00 | ஆலய தரிசனம் (பக்தி பாடல்கள்) |
| AM 07.00 | காலை கதிர் |
| AM 08.00 | நாளிதழ் நேரம் |
| AM 09.00 | SMS Time (Live) |
| AM 09.58 | காலை செய்தி |
| AM 10.00 | HELLO DD |
| AM 10.30 | புதுயுகம் |
| AM 11.00 | சிரிக்க சிரிக்க |
| AM 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 12.30 | தமிழ் பேசு தமிழா |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | நகைச்சுவை திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்தி |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 07.30 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | HELLO DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# நல்லொழுக்கமும் மதுவிலக்கலும் நெல்லியடியில் கருத்தமர்வு

வடமராட்சி லயன்ஸ் கழகம் நடாத்தும் நல்லொழுக்கமும் மதுவிலக்கலும் பற்றிய கருத்தமர்வு இன்று இடம்பெறுகின்றது.

வடமராட்சி லயன்ஸ் கழகமும், வடபிராந்திய நல்லொழுக்க சம்மேளனத்தின் ஆதரவுடன் வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான இக் கருத்தமர்வை காலை 9 மணி முதல் 11 மணிவரை நெல்லியடி மத்திய கல்லூரியில் நடாத்தவுள்ளது.

மாணவர்களூடாக கிராம மட்ட மக்களிற்கு விழிப் புணர்வை ஊட்டுவதே இதன் நோக்கமாகும்.

இக்கருத்தரங்கில் மதகுருமார்களும், வைத்திய கலாநிதிகளும், சம்மேளனப் பிரதிநிதிகளும் வளவாளர்களாக வருகை தரவுள்ளனர்.

இந்நிகழ்வு வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைரும், மாகாணசபை உறுப்பினருமாகிய வேலுப்பிள்ளை சிவயோகன் தலைமையில் நடைபெறும். (18)

# பொதுக்கூட்டம்

கனடா வல்வை ஒன்றிய பொதுக் கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி கனடா ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் கலாசார மண்டபத்தில் பிற்பகல் 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த வருடாந்த பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவும், வல்வை கல்வி வளர்ச்சி சம்பந்தமான கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளன.

எனவே சகல வல்வை மக்களையும் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர.

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



சுவாமி ரிஷி தொண்டுநாத சுவாமிகளின் ஏற்பாட்டில், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறுமுகத்தான்குளம் அ.த.க பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

யுத்தத்தாலும், வறுமையினாலும் மிகவும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வானது ஆறுமுகத்தான்குளம் அ.த.க பாடசாலையில் வைத்தியர் கே.பி பிரசாந்தன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வைத்தியர் கே.பி பிரசாந்தன், ரிஷி தொண்டுநாத சுவாமிகள், சுவாமிகளின் தாயார் திருமதி சிவலோஜினி கனகரத்தினம், மனிதநேயம் அமைப்பின் பணியாளர் சுதர்சன் ஆகியோர் கலந்துகொண்டனர். (160)

# தமிழ் இலக்கிய மரபின் வடிவங்களை சுவை குன்றாது வழங்கும் கம்பன் கழகம்

யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் இலக்கிய மரபின் அனைத்து வடிவங்களையும் சுவை குன்றாது எமக்குத் தருகின்ற அட்சய பாத்திரமாக அகில இலங்கைக் கம்பன் கழகம் திகழ்கிறது. இவ்வாறு அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்திய 'வித்தகம்' நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர்ஐ.தயானந்தராஜா தெரிவித்துள்ளார்.

நல்லூர் கம்பன் கோட்டத்தில் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்ற இந்நிகழ்வில் அதிபர் தயானந்தராஜா மேலும் தெரிவித்ததாவது,

இளைய தலைமுறையினரை இலக்கியப் பணிகளில் ஈடுபடுத்தி வரும் கம்பன் கழகம் பாரிய பணிகளை ஆற்றிவருகிறது. தமிழ் இலக்கிய மரபின் அனைத்துக்கலை வடிவங்களையும் சுவை குன்றாது எமக்குத் தருகின்ற அட்சய பாத்திரமாக கம்பன் கழகம் திகழ்கிறது.

'வித்தகம்' மாதாந்த தொடர் அரங்கில் "திருத்தொண்டர் புராணத்தில் தேவாரமுதலிகள்" என்னும் பொருளில் கம்பவாரிதி ஜெயராஜ் தலைமையில் சிந்தனை அரங்கினை நடாத்தியுள்ளனர்.

அரங்கத்திலும் சபையிலும் உள்ள இலக்கியப் புலமையாளர்கள் மத்தியில் தலைமையுரை நிகழ்த்தும் தகுதி எனக்கு இருப்பாதகத் தெரியவில்லை.

இறைவன் என்றும் நிறைவுடையவன் மனிதன் எப்பொழுதும் குறைவுடையவன் நிறைவுடையவரைக் குறைவுடையவர்கள் அணுக வேண்டும் எமது புற இருளைப் போக்குவதற்குச் சூரியன் உதவுவது போல அக இருளைப் போக்கி இறைவனை அணுகுவதற்கு நாயன்மார் அருளிய திருமுறைகளும், ஞானநூல்களும் உதவும். இவற்றை நாம் தெளிவு பெறுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித்தந்த கம்பன் கழகத்தின் பணி பாராட்டத்தக்கது எனக் குறிப்பிட்டார். கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் நடைபெற்ற சிந்தனை அரங்கில் ஞான போதகர் சம்பந்தர் பற்றி கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தனும், வள்ளல் வாகீசர் பற்றி ந.விஜயசுந்தரமும், தம்பிரான் தோழர் பற்றி தமிழருவி த.சிவகுமாரனும் உரை நிகழ்த்தினர். வவுனியா கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் வே.ஞானசம்பந்தன் கடவுள் வாழ்த்து இசைக்க லோ.துஷிகரன் வரவேற்புரை நிகழ்த்தினார். (10)

# காணாமற் போனநபர் மீண்டும் கண்டுபிடிப்பு

(திருநெல்வேலி)

கொக்குவில் பெடஸ்தா நிறுவனத்திலிருந்து கடந்த சில நாட்களுக்கு முன்னர் காணாமற் போயிருந்த வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சுமார் 45 வயதுடைய குமரன் என்னும் நபர் கடந்த வெள்ளிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

தாவடி அம்பலவாண ஸ்ரீ வேதவிநாயகர் ஆலயத்தில் இவர் காணப்படுவதாக இவரைத் தெரிந்த ஒருவர் பெடஸ்தா நிலையப் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டு தெரிவித்ததையடுத்து உடனடியாக ஆலயத்துக்கு வந்த பொறுப்பாளர் அந்நபரை அழைத்துச் சென்று மீண்டும் பெடஸ்தா நிறுவனத்தில் இணைத்துள்ளார்.

இவரைத் திடீரென்று காணவில்லை என்பதால் இவர் பல வருடங்களாகத் தங்கியிருந்த அந் நிறுவனத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இவரைக் காணவில்லை எனப் பத்திரிகையில் விளம்பரம் போடுவதற்கும் இவரது தாயார் ஆயத்தமானார். இவர் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அந் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் நிம்மதியடைந்துள்ளனர்.

இந் நபரது சகோதரன் ஜேர்மன் நாட்டிலிருந்து இவரைப் பார்ப்பதற்காக இங்கு வந்திருந்த வேளையிலேயே இவர் காணாமற் போயிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (137)

# தேசிய பாடசாலைகளுக்கு அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

நாட்டில் உள்ள தேசிய பாடசாலைகளில் 106 சிங்கள, தமிழ் முஸ்லிம் தேசிய பாடசாலைகளுக்கான அதிபர் பதவிக்கு கல்வி அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்கவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன இவற்றில் வடமாகாணத்தில் 16 பாடசாலைகளும், கிழக்கு மாகாணத்தில் 10 பாட-சாலைகளும் அடங்குகின்றன.

வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலயம், வவுனியா தமிழ் மகாவித்தியாலயம், வவுனியா மடுக்கந்தை தேசிய பாடசாலை, வவுனியா காமினி வித்தியாலயம், மன்னார் சித்திவிநாயகர் தேசிய பாடசால்லை, மன்னார் அல்.அஸார் தேசிய பாடசாலை, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, மல்லாவி மத்திய மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மத்திய மகாவித்தியாலயம், கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம், முழங்காவில் மத்திய மகாவித்தியாலயம், முசலி தேசிய பாடசாலை ஆகிய தேசிய பாடசாலைகளுக்கே அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (10)


# பண்ணைக்கடலில் அமைக்கப்பட்ட பாலம் விரைவில் திறந்துவைக்க ஏற்பாடு

யாழ்நகரில் இருந்து தீவகத்துக்குச் செல்லும் பண்ணை வீதியின் விரைவாற்றுப்பகுதியில் அமைக்கப்பட்ட பெரிய பாலத்தின் வேலைகள் முடிவடைந் துள்ளன.

மேலும் பக்க வீதிகளுக்கு கல்லுப்போட்டு உயர்த்தும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த வீதி திறக்கப்பட்டதும் தற்காலிக பாலம் அகற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை முன்பிருந்த ஒஜ்ரங்குபாலப்பகுதியில் அமைந்திருந்த (யூரோவில்தொழில் நுட்பம்) பாலம் அகலப்படுத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

100 மில்லியன் ரூபா செலவில் அகலிப்பு மற்றும் திருத்தப்பட்டுவந்த பண்ணை ஊர்காவற்றுறை வீதியின் அகலத்துக்கு ஒடுக்கமான இந்தப் பாலம் பொருத்தமாக இல்லை. இத்தகைய பணியை முடுக்கி விடுவதற்காக பாலத்திற்கு கிழக்கு பக்கப்பாதை அமைக்கப்பட்டு வருகிறது குறிப்பிடத்தக்கதாகும்.

பாலம் திறக்கப்படுவதுடன் பண்ணை வீதி - மண்டைதீவு சந்தி தொடக்கம் முற்றவெளி சுற்றுவட்டம் வரையான வீதி வேலைகளும் முற்றுப்பெறும் என்று கூறப்படுகின்றது. (23)




## மாவை, சிறிதரன் தென்னாபிரிக்கா பயணம் பிரபாகரனுடன் சந்திப்பு(?) என றோ தகவல்




மாவை சேனாதிராஜாவும் சிறிதரனும் தென்னாபிரிக்காவுக்குப் பயணமாகியிருக்கினம்.

இந்தப் பயணம் ஏன் தெரியுமா?

அங்கே இருக்கும் பிரபாகரனைச் சந்திப்பதற்காகத்தானாம்.

தலைவர் பிரபாகரன்தான் தன்னுடைய தலைவர் என்று எப்போதும் சொல்லிக் கொண்டிருக்கும் சிறிதரன், 'பிரபாகரன் இன்னும் உயி-ரோடு இருக்கிறார்' என்றும் சொல்லித்திரிகிறார்.

இந்தியாவில் தான் சந்தித்த அரசியல்வாதிகளுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இப்படித்தான் கதை விட்டிருக்கிறார்.

அதைப்போல அப்படியொரு கதையை விட்டு, மாவையைக் கூட்டிக்கொண்டு தென்னாபிரிக்காவுக்குப் போயிருக்கிறார்கள் இருவரும்.

மாவையும் போராட்டம் வெடிக்கும். இறுதி வரை போராடுவோம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கும் ஆள்தானே....

இப்ப இரண்டு பேரும் சாடிக்கேத்த மூடிகளாக தென்னாபிரிக்காவுக்குச் சேர்ந்து போய்....?????

இந்தத் தகவலைத் தெரிவித்ததோ இந்தியாவின் புலனாய்வுத் தரப்புத்தான்.


## இனவாதத்துக்கு எதிரான சட்டத்தில் கைதாகும் நண்பர்கள்

இலங்கையில் இனவாதத்தைத் தூண்டும் விதமாகப் பேசினாலோ, செயற்பட்டாலோ அவர்களைத் தண்டிப்பதற்கு அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

தண்டனை இரண்டு ஆண்டுகள் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கு.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால் நிச்சயமாக பல அரசியல்வாதிகளும் ஊடகவியலாளர்களும் கைது செய்யப்பட்டு சிறைக்குப் போவார்கள்.

அப்படிச் சிறைக்குச் செல்லக்கூடியவர்கள் யாராக இருக்கும் என்று ஒரு பட்டியலை நண்பர்கள் போட்டார்கள்.



1. விமல் வீரவன்ஸ
2. சம்பிக்க ரணவக்க
3. கலபொடாத்த ஞானசார தேரர்
4. உதய கம்மன்பில
5. அரியநேத்திரன்
6. சிறிதரன்
7. சிவாஜிலிங்கம்
8. கஜேந்திரன்
9. ஐங்கரநேசன்

... ... ... ... ...

அப்ப சிறைக் கூடமே அமர்க்களமாகத்தானிருக்கும்...!

## அமெரிக்க நாடகம்

அமெரிக்காவின் உதவி ராஜாங்கச் செயலர் டொம் மாலினோவ்கீ வடபகுதிக்கு வந்து பல-ரையும் சந்தித்துப் பேசியிருந்தார்.

அதாவது தமிழர்களின் கோபத்தைத் தணிக்கும் முயற்சியை எடுத்திருக்கிறார். இல்லையென்றால் 'போராட்டம் வெடிக்கும்' என்று மாவை யும் 'ரணிலுடன் பேச்சில்லை' என்று முதலமைச்சர் விக்கினேஸ்வரனும் கூளுரைக்க அமெரிக்கா உண்மையில் பயந்தே விட்டது.

அதனால் ஓடோடி வந்த துணை ராஜாங்கச் செயலாளர் தமிழ்ப் பிரதிநிதிகளின் காலில் விழாக்குறையாக கெஞ்சியிருக்கிறார்.

அதோடு மட்டும் நிற்காமல், தமிழர்களின் மனங்களைக் குளிர்விப்பதற்காக முள்ளிவாய்க்காலுக்குச் சென்று இறுதிப்போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலியையும் செய்திருக்கிறார்.

'இது போரிலே கொல்லப்பட்ட அமெரிக்காவுக்கான அஞ்சலி' என்று வேறு சொல்லியுமுள்ளார்.



இதெல்லாம் ஏன் தெரியுமா?

இப்பொழுது ஆட்சியில் இருக்கும் புதிய அரசாங்கத்துக்கு தமிழர்கள் நெருக்கடியைக் கொடுக்கக் கூடாது. சிறிது கால அவகாசத்தை வழங்க வேண்டும் என்பதுதான்.

இதே உதவி ராஜாங்கச் செயலர் இன்னொரு வேலையையும் பார்த்திருக்கிறார்.

சிங்களத் தரப்பும் முகம் சுழிக்கக் கூடாது என்பதற்காக அளுத்கமவுக்கும் போய், அங்கும் யுத்தத்தில் பலியாகியவர்களுக்கு அஞ்சலி செலுத்தியிருக்கிறார்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் உயிரிழந்த இரண்டு தரப்பினருக்காகவும் அமெரிக்காவின் சார்பில் தாம் அஞ்சலி செலுத்தியதாக டொம் மாலினோவ்கீ சொன்னார்.

காணாமல் போனவர்கள் உள்ளிட்ட சில பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணமுடியாது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நல்லாயிருக்கு நாடகம்...

வெற்றியில் புதிதாக விரல் ஒன்றும் முளைப்பதில்லை. தோல்வியில் உயிர் ஒன்றும் போவதில்லை. போராடு - கவிஞர் சுகி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## சிங்கள வெறுப்பில் மிதந்து...

சமகால அரசியலை அலசி ஒரு பிடி பிடிக்கும் வட்டத்தினரின் குழும உரையாடல் ஒன்றிற்குச் சென்றிருந்தபோது, பல திடுக்கிடும் தகவல்கள் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டன. சுருக்கம் என்னவென்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறுக்காக அல்ல நெடுக்காகப் பிளவு ஒன்றை எதிர்நோக்கியிருக்கிறது என்பதுதான்.

தனிக்கட்சி பதிவு செய்தல், கொடும்பாவி எரிப்பு போன்ற விஷயங்களால் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான முறுகல் உச்சமடைந்திருப்பதாகவும் தலைவர் சம்பந்தனிடம் சுரேஷ் இப்போதெல்லாம் முகங்கொடுத்துப் பேசுவதில்லை என்பதுதான் நிலைமை என்று கூறப்பட்டது.

இனஅழிப்புத் தீர்மானத்தை தன்னிச்சையாக நிறைவேற்றியதிலிருந்து, சம்பந்தன் சுமந்திரன் அணியிலிருந்து விலகிவிட்ட முதலமைச்சர் விக்னேஸ்வரன், "நான் யாரைக் கேட்கவேண்டும்" என்று கட்டபொம்மன் ரேஞ்சுக்கு தனிப் பாளையத் தலைவராகி வருகிறார் என்றும் சொல்லப்பட்டது.

முதலமைச்சரின் பேச்சுக்கள் பற்றி முன்பெல்லாம் கோள் சொல்லப்பட்டால் காதில் வாங்காததுபோல் இருந்துவிடும் திரு. சம்பந்தன், இப்போதெல்லாம் முதலமைச்சர் பற்றிய செய்திகளை யாராவது சொல்லும்போது, "அப்படியா சொல்கிறார்..." என்று தலையாட்டிக்கொண்டே கூர்ந்து கேட்கிறாராம்.

புலம்பெயர் தீவிரவாதிகளின் செல்லப்பிள்ளையாகவும் கருதப்படும் புதிய "தேசியத்தலைவர்" சிறீதரனும், அடுத்த தேர்தலில் சம்பந்தன்-சுமந்திரன் அணி தங்களுக்கு "சீற்" தராமல் வெட்டிவிடக் கூடும் என்று அஞ்சும் மற்றும் சில தீவிரத் தேசியச் சில்லறை வாயாடிகளும் தங்களது தீவிரவாத அணிக்கு ஆங்கிலமும் சட்டமும் தெரிந்த ஒருவர் தலைமை தாங்கத் தேவைப்படுவதை உணர்ந்துள்ளனர்.

இவர்கள் காட்டும் "பப்பா" மரமென்றில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் தன்னை மறந்து ஏறிக்கொண்டிருப்பதாகவும் தகவல். இன்று தமிழ் மக்களுக்குத் தலைவராவதற்குரிய முதற்றகைமை சிங்கள ஆட்சித் தலைவரின் முதன்மைப் பகைவராகிக் கொள்வதுதான் என்பதன் அடிப்படையிலேயே அவரது ரணிலுடனான முறுகல் பிரமாதப்படுத்தப் பட்டிருக்கிறது.

சம்பந்தன்-சுமந்திரன் அணியின் குறிப்பாக சுமந்திரன் அவர்களின் சட்டாம்பிள்ளைப் போக்கு பிடிக்காத கூட்டமைப்பிற்குள் உள்ள இந்தப் பல்வேறு அணியினரும் தேர்தலுக்கிடையில் மாற்றுத் தலைமையை உருவாக்குவதை நோக்கிச் செல்கிறார்களாம்.

கூட்டமைப்பு பிளவுபடப் போகிறது... தமிழ் மக்கள் இம்முறை பிரிந்து வாக்களிக்கப் போகிறார்கள் என்றெல்லாம் பலர் கவலையுடனும் சிலர் சந்தோசமாகவும் கருத்தாடினார்கள். இன்னும் சிலர் தமிழ்நாட்டில் தி.மு.க. அ.தி.மு.க. என்றிருப்பதுபோல் இங்கும் இருகட்சியாக வருவது தமிழ் ஜனநாயகத்திற்கு நல்லதுதானே என்கிற அளவுக்கு முன்னோக்கிய பாய்ச்சலாகச் சிந்தித்தார்கள்.

ஆனால் நமது மக்களைப் பொறுத்தவரை, தமிழ்த் தேசியக் கட்சி என்பது ஏக கட்சிதான். அதிலிருந்து பிரிந்து போகிறவர்கள் எவராக இருந்தாலும் (திருவாளர்கள் சம்பந்தன் சுமந்திரனேயானாலும்) அவர்கள் துரோகிகள்தான்.

அதாவது குறுக்காகப் பிளந்தாலும் நெடுக்காகப் பிளந்தாலும், நமது மக்கள் ஒன்றை தமிழ்த் தேசியத் தலைமை என்றும் மற்றதை துரோகத் தலைமை என்றுமே பார்க்கப் பழக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஏனென்றால், அவ்வளவு சிங்கள வெறுப்பில் ஊறியிருக்கின்றன அவர்கள் மனங்கள். சிங்கள ஆட்சியாளர்களை வெல்ல முடியாவிட்டாலும், தீர்வை எடுக்க முடியாவிட்டாலும்.... அவர்களுக்குக் கரைச்சல்கள் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய பலம் வாய்ந்த ஏகத் தமிழ்த் தலைமையே அவர்களுக்கு வேண்டும்.

தமிழர்களுக்குள்ளேயே ஜனநாயகத் தன்மையை மிளிரச் செய்வதற்கான இருகட்சி முறைமை எல்லாம் அவர்களுக்கு வேண்டாம். இங்கே எதற்கு எதிர்க்கட்சி? நமக்குத்தான் எப்போதுமான எதிர்க்கட்சியாக சிங்கள அரசு இருக்கிறதே! - *ஆசிரியர்*

# சுன்னாகம் நீர் குறித்த அறிக்கை எழுத்து மூலம் வெளிவரவில்லை

## நிப்போ தேசிய அமைப்பாளர் தெரிவிப்பு

சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைதல் தொடர்பாக வடமாகாண சபையால் அமைக்கப்பட்ட நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கை எழுத்து மூலமானதாக இல்லை எனவும், எனவே நிலத்தடி நீர் மாசடைதல் தொடர்பாக அரசின் கீழ் சட்ட ரீதியான சபையை அரசு உருவாக்க வேண்டும் என நிப்போ அமைப்பின் தேசிய அமைப்பாளர் திலக் பட்டியகும்புற நேற்று முன்தினம் சனிக்கிழமை தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது நிப்போ தேசிய புலமைசாலிகள், தொழில் வல்லுநர்கள் ஒன்றியம் 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது 17 மாவட்டங்களில் பொது மக்களுக்கான சேவையை வழங்கிவருகிறது.

இந்தக் குழுவில் பொதுப்பிரசசினைகள், பொது மக்கள் சார்பான பிரச்சினைகளை முன்வைத்து தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்தில் இவ்வமைப்பை ஆரம்பித்துள்ளோம். இன்று 18 ஆவது மாவட்டமாக யாழ். மாவட்டத்தில் ஆரம்பித்துள்ளோம்.

எமது அமைப்பு குடிநீர் தொடர்பாக மிகவும் அக்கறை கொண்ட அமைப்பாகும். இலங்கையில் அதிகமான மக்கள் பயன்படுத்தக் கூடாத அளவு உள்ள நீரையே பயன்படுத்துகின்றனர். இதனால் நோய்கள் அதிகரித்துச் செல்கிறது.

சுன்னாகம் பிரதேச மக்களிடமிருந்து எமக்கு அழைப்பு வந்ததையடுத்து கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி சுன்னாக மக்களுடன் கலந்துரையாடி ஆய்வுகளை மேற்கொண்டோம்.

தற்போது அடிப்படை அறிக்கை தயாரித்துள்ளோம். முழுமையான ஆய்வு அறிக்கையை விரைவில் வெளியிடவுள்ளோம்.

இப்பிரச்சினை பாரதூரமான பிரச்சினையாக இருந்தும் இது தொடர்பான பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் தரப்பில் எவரும் இதுவரை இல்லை என்பதை அறிந்து கொண்டோம். அது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

வட மாகாண சபையால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கை, எழுத்து மூலமாக வெளியிடப்படவில்லை என்றும் அவ்வறிக்கையில் நிலத்தடி நீரில் பாதகமான நச்சு பதார்த்தங்கள் இல்லை என்றும் வெளியிடப்பட்டுள்ளதாக அறிகிறோம்.

இவர்கள் எவ்வாறு இம் முடிவைப் பெற்றுக் கொண்டார்கள். எந்த அதிகாரிகள் அவ் ஆய்வில செயற்பட்டார்கள் என்பதை அறிந்து கொள்ளவும் அவர்களிடம் விளக்கத்தை பெற்றுக் கொள்ளவும் விரும்புகின்றோம்.

நாம் மேற்கொண்ட ஆய்வுகளில் கைதரோ காபன் கலந்துள்ளமை அறியக்கூடியதாக இருந்தது. இது நீரில் இருக்கக் கூடிய செறிவை விட அதிகமாக உள்ளது.

இது உலக சுகாதார அமைப்பினதும் இலங்கை தரப்படுத்தல் அமைப்பினதும் அளவை விட அதிகமானதாகும். மேலும் பல நாடுகளில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்ட போது தொழில்நுட்ப ரீதியான முடிவுகளைப் பெற்று தீர்வுகளைக் கண்டுள்ளனர். அரசாங்கம் இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

இங்குள்ள எமது குழு இப்பிரச்சினை தொடர்பாக போராடியவர்களுடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்வோம்.

மத்திய அரசாங்கம் விரைவாக தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என அவர் மேலும் கூறினார்.

# இராஜதந்திர கடவுச் சீட்டை இழந்தார் உதயங்க வீரதுங்க

(கொழும்பு)

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவரும், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பெறாமகனுமான உதயங்க வீரதுங்கவின் இராஜதந்திரக் கடவுச்சீட்டு விலக்கிக் கொள்ளப பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உக்ரேனிய பிரிவினைப் போராளிகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்தார் என்று, உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக, உக்ரேனிய அரசாங்கம் செய்துள்ள முறைப்பாட்டை அடுத்து. அவருக்கு விநியோகிக்கப்பட்ட இராஜதந்திர கடவுச்சீட்டை விலக்கிக் கொள்ள, குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இதனிடையே, உதயங்க வீரதுங்க தற்போது எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. புதிய அரசாங்கம் அவரை நாடு திரும்ப உத்தரவிட்ட போதும், அவர் நாடு திரும்பவில்லை.

இந்தநிலையிலேயே, அவரது இராஜதந்திரக் கடவுச்சீட்டு விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

## யோசிதவின் வெளிநாட்டுப்பயிற்சி 210 இலட்சம் ரூபா செலவழிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரான இலங்கை கடற்படையின் லெப்டினன்ட் யோசித ராஜபக்ஷ, வெளிநாட்டில் பயிற்சி பெற்றதற்காக 210 இலட்சம் ரூபா கடந்த அரசாங்கத்தினால் செலவிடப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அவர், முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவில் இணைக்கப்பட்டதன் பின்னர் நீக்கப்பட்டார். ஜனாதிபதி பாதுகாப்பாளராக அவருக்கு அந்தளவுக்கு பயிற்சியளிக்கப்படவில்லை என்றும் யோசித ராஜபக்ஷ, கடற்படையில் இணைந்து கொள்வதற்கான நடைமுறைகள் பின்பற்றவில்லை என்றும் அவர் பயிற்சி பெற்றமை தொடர்பில் விசாரணை நடத்திய குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சினால் கடற்படை தலைமையகத்துக்கு கிடைத்த பணிப்புரைக்கு அமையவே யோசித ராஜபக்ஷ, இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

அவருடைய கல்விச்சான்றிதழ்கள் தொடர்பிலான ஆவணங்கள் அவருடைய தனிப்பட்ட கோப்புகளில் இல்லை என்று அறியமுடிகின்றது.

# ஜனாதிபதித்தேர்தல் எதிர்காலத்தில் இல்லை

ஜனாதிபதி முறைமை இரத்து செய்யப்பட உள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுநிர்வாக மற்றும் பௌத்த சாசன அமைச்சர் கரு ஜயசூரிய இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்காலத்தில் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட மாட்டாது இந்திய முறையில் விசேட சபையொன்றின் மூலம் ஜனாதிபதி தெரிவு மேற்கொள்ளப்படும். ஜனாதிபதி தெரிவு குறித்த விசேட முறைமைகள் புதிய அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்படும்.

இந்த புதிய முறைமை குறித்து அரசாங்கம் பல்வேறு தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது. நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னதாக இது தொடர்பிலான யோசனை சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெற்றுக்கொள்ளப்படும்.

19 ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் புதிய ஜனாதிபதிக்கு வழங்கப்படும்.

மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அதிகாரங்கள் அவ்வாறே இருக்கும் அவரது பதவிக் காலம் முடிவடைந்து புதிய ஜனாதிபதி நியமிக்கப்படும் போதே புதிய அதிகாரங்கள் அமுலில் இருக்கும் என அமைச்சர் கரு ஜயசூரிய சிங்கள வார இறுதி பத்திரிகையொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

# கு. அழகிரிசாமி



**கு.அழகிரிசாமியின் சில கதைகளைப் படித்தபோது, 60 - 70 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட கதைகளைப் போல் தோன்றவில்லை. ஏதோ சென்ற ஆண்டுதான் ஐரோப்பாவில் இருந்து ஒரு பின்நவீனத்துவ எழுத்தாளர் எழுதிய கதைபோல் இருக்கிறது. அதே சமயம், 70 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் வாழ்க்கை எப்படி இருந்தது என்ற வரலாற்றுப் பதிவாகவும் நாம் கு.அழகிரிசாமியின் கதைகளைப் படிக்கலாம். வரலாற்றைப் பதிவு செய்யும் பழக்கம் இல்லாத நமக்கு, இந்தக் கதைகள் கால எந்திரத்தில் பின்னோக்கிச் செல்வதான அனுபவத்தையும் தருகின்றன.**

■ சாரு நிவேதிதா

கோவில் திருவிழாக்களில் உறுமி மேளமும் நையாண்டி மேளமுமாக அடித்துப் பட்டையைக் கிளப்புவார்கள் அல்லவா? ஆட்டமும் தூள் பறக்கும். ஆடியவர், அடித்தவர், பார்த்தவர் எல்லோருமே அப்போது ஒரு உச்சக்கட்ட பரவச நிலையில் இருப்பார்கள். கு. அழகிரிசாமியைப் படிக்கும்போது அப்படிப்பட்ட உணர்வே ஏற்பட்டது. அதோடு அவரது கிண்டல், நையாண்டி எல்லாமும் சேர்ந்து ஏதோ வசியம் செய்யப்பட்டவர்களைப் போல் ஆகிவிடுகிறோம்.

இப்பேர்பட்ட எழுத்து வன்மை கொண்ட கு. அழகிரிசாமியின் பெயர்கூட இன்றைய தலைமுறைக்குத் தெரிந்திருக்குமா என்று வருத்தத்துடன் யோசித்தேன். அதிலும் புதுமைப்பித்தன் இவ்வளவு பரவலாக அறியப் பெற்றிருக்கும்போது கு.அழகிரிசாமியின் பெயர்கூடத் தெரிந்திராத நிலை ஆச்சரியத்தையே அளிக்கிறது.

வெறும் 47 ஆண்டுகளே வாழ்ந்து மறைந்த கு.அழகிரிசாமி (1923-1970), சிறுகதைகளுக்காகவே அறியப்பட்டாலும் இசை, நாடகம், கட்டுரை, மொழிபெயர்ப்பு, ஓவியம், பத்திரிகை ஆசிரியர் (மலேஷியாவில் ஐந்து ஆண்டுகள் தமிழ் நேசன் பத்திரிகையில் பணி) என்று பல்வேறு துறைகளில் இயங்கித் தடம் பதித்திருக்கிறார். சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜரின் கீர்த்தனைகளை எப்போதும் முணு முணுத்துக் கொண்டே இருப்பார் என்று அவரது பால்யகால நண்பரான கி.ராஜநாராயணன் குறிப்பிடுகிறார்.

கர்நாடக இசையை முறையாகக் கற்றவர். காருக்குறிச்சி அருணாசலத்தின் நெருக்கமான நண்பர். அவருக்காக அழகிரிசாமி எழுதிய இரங்கல் கட்டுரை,சங்கீத இரசிகர்கள் அவசியம் வாசிக்க வேண்டிய ஒன்று. தியாகராஜரின் கீர்த்தனைகளில் இருந்தே அவரது வாழ்க்கைச் சரிதத்தை எழுத வேண்டும் என்று சொல்லிக்கொண்டே இருப்பார் என்கிறார் கி.ரா. அதன் விளைவுதான் திரிவேணி என்ற கதை.

அழகிரிசாமியும் கி.ரா.வும் ஒரே ஊர்க்காரர்கள் (இடைசெவல்). கி.ரா.வைப் போலவே அழகிரிசாமியின் தாய்மொழியும் தெலுங்கு. கி.ரா.வுக்கு அழகிரிசாமி எழுதிய கடிதங்களே தனிப் புத்தகமாக வந்துள்ளது. அழகிரிசாமி, கரிசல் மண்ணைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர் எழுத்து எனக்குத் தஞ்சை மாவட்டத்து எழுத்தாளர்களையே நினைவூட்டியது. தஞ்சை எழுத்தாளர்களிடம் மட்டுமே அதிகம் காணக்கூடிய கிண்டலும், கேலியும், சுய எள்ளலும், பெண்கள் மீதான அதீத ஆர் 'மும், அழகிரிசாமியின் கதைகளில் அனாயாசமாகத் துள்ளி விளையாடியதால் அப்படி நினைக்கத் தோன்றியது.

இரண்டு பெண்கள் என்ற கதை. கதை நடப்பது நாற்பதுகள் என்று யூகிக்க முடிகிறது. மதுரையிலிருந்து சென்னைக்கு மாற்றலாகி வரும் கல்யாணம் ஆகாத ஒரு இளைஞன். மேற்கொண்டு அழகிரிசாமி சொல்கிறார்: "மனித வாழ்க்கைக்கு மதுரையென்றாலும் ஒன்றுதான் சென்னையென்றாலும் ஒன்றுதான். இரண்டும் ஒன்றுபோலவே மோசமாக இருக்கும்போது எங்கே இருந்தால் என்ன? மதுரையிலும் வீட்டு வாடகை அதிகம் சென்னையிலும் வீட்டு வாடகை அதிகம்" மதுரையிலும் அயல் வீட்டுப் பெண்களோடு பிரம்மச்சாரிகள் பேசக் கூடாது; சென்னையிலும் அயல் வீட்டுப் பெண்களோடு பிரம்மச்சாரிகள் பேசக்கூடாது. மதுரையிலும் காதலிக்க வேண்டுமென்று விரும்பாத ஆண்கள் இல்லை. சென்னையிலும் காதலிக்க வேண்டுமென்று விரும்பாத ஆண்கள் இல்லை.

மயிலாப்பூரில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு தங்குகிறான் இளைஞன். நிறைய வாசிப்பவன். தெருக்கார இளைஞர்கள் யாரும் அவனோடு பேசுவதில்லை. கிழவர்கள் மட்டும் பேசக் காத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களோடு பேச இளைஞனுக்கு விருப்பம் இல்லை. கிழவிகளோடும் வாலிபப் பெண்களோடும் மட்டும்தான் பேசலாம். ஆனால், அவர்களோடு பேசினாலும் உலகம் சந்தேகப்படும். சிறுவர்களோடு பேசலாமா என்றால், "ஆசாமி கல்யாணமாகாதவன் என்று தெரிந்துகொண்டால், என் வீட்டுக்கு வரும் ஒவ்வொரு சிறுவனும் தன் தன் அக்காளுடைய காதல் கடிதத்தைக் கொண்டு வருவதாகவே உறுதியோடு கருதி, மேல் நடவடிக்கை எடுக்க ஆரம்பிப்பார்கள்." இந்த நிலையில், இளைஞனிடம் நிறைய பத்திரிகைகளும் புத்தகங்களும் உள்ளன என்பதைத் தெரிந்துகொள்ளும் எதிர்வீட்டுப் பெண், தன் தந்தையைத் தூது விட்டு அந்தப் புத்தகங்களை வாங்குகிறாள்.

(அந்தக் காலத்தில் புத்தக வாசிப்புக்கு மக்கள் எப்படி அடிமையாக இருந்தார்கள் என்பதை அழகிரிசாமியின் பல கதைகளிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. அன்பளிப்பு என்ற அதிஅற்புதமான கதையில், ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவன் ஒருவன், வால்ட் விட்மனின் கவிதைத் தொகுதியை கதாசிரியனிடமிருந்து இரவல் கேட்கிறான்). நம் கதைக்கு வருவோம். இளைஞனின் பத்திரிகைகளும் புத்தகங்களும் எதிர்வீட்டில் இருந்து தெரு முழுவதும் போய் வருகின்றன. எதிர்வீட்டுப் பெண்ணும் இளைஞனும் ஒரே பஸ்ஸில் "காரியாலயம்" போய் வருகிறார்கள்.

ஒருநாள், கடும் மழையில் அவளைத் தன்னுடைய குடையில் அழைத்து வருகிறான். தெருக்காரர்கள் ஒன்றும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. இளைஞனுக்கு அந்தப் பெண்ணின் மீது துளியும் காதல் இல்லை. காரணம், அவள் அழகி அல்ல. அதைவிட முக்கியமான காரணம், கோடி வீட்டுப் பெண். அவளைப் போன்ற ஒரு கனக விக்கிரகம், பதினான்கு இலட்சம் ஜனத்தொகை உள்ள சென்னையில் மொத்தம் பத்து பேர் இருந்தால் ஜாஸ்தி. அப்படிப்பட்ட சௌந்தர்யவதியை அந்த இளைஞன் தன் வாழ்நாளில் பார்த்ததில்லை. ஒருநாள், அவள் வீட்டுக்கும் இவனுடைய உதவி தேவைப்படுகிறது.

இனி அழகிரிசாமி: மதியம் மூன்று மணி. ஈஸிசேரில் அறிதுயிலில் இருந்தபோது யாரோ கதவைத் தட்டினார்கள். வந்து நின்றவன் கோடி வீட்டுக் கனக விக்கிரகத்தின் தம்பி. "வா தம்பி". இந்த இரண்டு சொற்களைச் சொல்லும்போது என் நாக்கு தழுதழுத்தது. பேச முடியாமல் திக்கு முக்காடினேன். அவர்களுக்கு, இளைஞனிடம் உள்ள டைப்ரைட்டர் வேண்டும். தானே கொண்டுபோய் கொடுத்து, மறுநாள் போய் (அப்போதுதானே இரண்டு நாள் போக முடியும்?) எடுத்துக்கொண்டு வருகிறான்.

மறுநாள், இளைஞனை வீட்டுக்காரர் காலி பண்ணச் சொல்கிறார். இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. கோடி வீட்டுக்குப் போனதுதான் பிரச்சினை என்று தெரிகிறது. தான் தலையிட்டிருக்காவிட்டால், தெருப் பையன்களே அவனை ஏதாவது செய்திருப்பார்கள் என்கிறார் வீட்டுக்காரர். இவனும் அறையைக் காலி செய்துவிட்டு வேறு இடம் போகிறான். ஆனாலும் எதிர்வீட்டில் சிநேகம் வைத்துக்கொண்டபோது ஒன்றும் சொல்லாத தெரு, கோடி வீட்டுக்குப் போனதும் ஏன் தன்னைத் துரத்தி அடித்தது? அவனுடைய நண்பரான பத்திரிகை ஆசிரியர் விளக்கம் சொல்கிறார்: அழகில்லாத எதிர் வீட்டுப் பெண்ணோடு பழகினால் யாருக்கும் பாதகம் இல்லை. நீங்கள் குடியிருந்த வீட்டுக்காரரும், எதிர்வீட்டுக்காரரும், அந்தத் தெருவில் இருந்த அத்தனை பேரும் அந்தக் கோடி வீட்டு அழகி மீது வெறியோடு இருந்திருக்கிறார்கள். சந்தர்ப்பம் கிடைத்தால் எவனுமே அந்தப் பெண்ணைக் கெடுக்கவும் தயங்கமாட்டான்.

இதேபோல் இன்னொரு கதை. தகப்பனும் மகனும். "இது ஒரு சிறுகதை; கட்டுரை அல்ல" என்ற அறிவிப்போடு துவங்குகிறது கதை. காரணம், இன்றைய காலகட்டத்தில் எழுதப்படும் கதைகளைப்போல் படமெல்லாம் போட்டு விளக்குகிறார் அழகிரிசாமி. ரயில் பெட்டியின் இருக்கைகளின் படம். முதலாம் எண் இருக்கையில் கதாநாயகி. இரண்டாவது எண்ணில் அவள் தங்கை. மூன்றாவது, கதை சொல்லியின் நண்பர். எதிர் வரிசையில் முதலாம் இலக்கத்தில் கதைசொல்லி. இரண்டாவது எண்ணில் கதாநாயகர். அதாவது, நாயகியின் தகப்பனார். சென்னையில் இருந்து திருவனந்தபுரம் செல்லும் எக்ஸ்பிரஸில், கதாநாயகர் தன் இரண்டு மகள்களையும் மேலே குறிப்பிட்ட இரண்டு ஆசாமிகளிடம் இருந்தும் "காபந்து" பண்ணி திருச்சியில் இறங்குவதுதான் 13 பக்கம் நீளும் இந்தக் கதை.

கதைசொல்லியும் அவன் நண்பரும் கல்யாணம் ஆகாதவர்கள். கல்யாணமும் சமீபத்தில் நடப்பதாகத் தெரியவில்லை. ஏன்? நண்பரைப் பற்றித் தெரியாது. ஆனால் கதைசொல்லிக்கு மனைவியாக ஒரு உலகப் பேரழகி வேண்டும். அவன் கண்ணில் அழகான பெண்கள் தட்டுப்படாமல் இல்லை. சில பெண்கள் தூரத்தில் இருந்து பார்க்க மட்டும் அழகாகவும், சில பெண்கள் போட்டோவில் மட்டும் அழகாகவும், சில பெண்கள் மூக்கு மட்டும் அழகாகவும், சில பெண்கள் முகத்தைத் திருப்பிக்கொண்டால் மட்டும் அழகாகவும் இருந்தார்களே ஒழிய, உண்மையில் அழகாக இல்லை. அழகான பெண்களும் கிடைத்தார்கள். ஆனால் அவர்களுக்கு இவனைப் பிடிக்கவில்லை. ஏன்? இவன் அழகாக இல்லை. இப்படியாகக் கல்யாணம் தள்ளிக் கொண்டு போனது. "ஆனால், எப்பொழுதாவது ஆகும் என்றுதான் நம்புகிறேன். என் எதிர்கால மனைவி (நீங்கள் பிரம்மச்சாரிகளாக இருந்தால்) உங்கள் எதிர்கால மனைவியைப் போலவே பேரழகி. ஒரு இம்மியளவு குறைந்த அழகோடு, எந்தப் பெண் வந்து எனக்குக் கனகாபிஷேகம் செய்தாலும் நான் அவளை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை".

இந்த நிலையில் எதிர் இருக்கைக் கதாநாயகியை - அதிலும் வயது வராத பெண் - நான் காதலித்துவிடுவேனா? அது ஏன் இந்த மரமண்டைக்கு - அதாவது, கதாநாயகருக்குத் தெரியவில்லை? நாயகியின் தங்கையோ, ஏழு வயதுக் குழந்தை. ஆனால், அந்தக் குழந்தையின் மீது காற்றில் நண்பரின் சட்டை நுனி பட்டாலும், கதாநாயகர் எழுந்து நின்று கத்துகிறார். "நீங்களெல்லாம் தாய் தங்கையோடு பிறக்கவில்லையா, இத்யாதி, இத்யாதி". அந்தக் குழந்தை, தூக்கத்தில் நண்பர் மீது சாய்ந்தால் அதற்கும் ஒரு ரகளை. இப்படியே அந்தத் தகப்பனும் இரண்டு பெண் குழந்தைகளும் திருச்சியில் இறங்கிப்போகிறது.

படு கிண்டலாக எழுதப்பட்டிருந்தாலும், கதையின் உள்சரடாக மனிதர்களின் மனோவக்கிரம் பற்றிய அழகிரிசாமியின் கோபம் கொந்தளித்தபடியே இருக்கிறது. கடைசியில், வெளிப்படையாகவே முடிக்கிறார். "இவனெல்லாம் ஒரு அப்பனா? ஆபாசக் களஞ்சியம். தகப்பனுக்கு மகளைப் பார்த்தால் மகளைப்போல் காட்சியளிப்பாளா? காமக்கருவியாகக் காட்சியளிப்பாளா?"

இதுபோன்ற கதைகளைப் படித்தபோது, 60 - 70 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட கதைகளைப் போல் தோன்றவில்லை. ஏதோ சென்ற ஆண்டுதான் ஐரோப்பாவில் இருந்து ஒரு பின்நவீனத்துவ எழுத்தாளர் எழுதிய கதைபோல் இருக்கிறது. அதே சமயம், 70 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் வாழ்க்கை எப்படி இருந்தது என்ற வரலாற்றுப் பதிவாகவும் நாம் கு.அழகிரிசாமியின் கதைகளைப் படிக்கலாம்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டை உண்மையாக நேசித்தால் ஒதுங்கி இருக்க வேண்டும் மகிந்த



## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அறிவுறுத்து

மகிந்த ராஜபக்ஷ நாட்டை உண்மையாக நேசிக்கின்றவராயின் ஓரமாக இருக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க கேட்டுக்கொண்டுள்ளார்.

கொழும்பிலுள்ள தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை மூன்றாவது தடவையாக மகிந்த ராஜபக்ஷ அழிக்கவே முயற்சிக்கின்றார். முதலாவதாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கத்தில் சிறிமாவின் பிரஜாவுரிமையைப் பறித்து, இவ்வாறான ஒருவருக்கு கட்சியில் இருக்க முடியாது என இலங்கையில் உள்ள அனைத்து ஆதரவாளர்களையும் திரட்டி கூட்டங்களை தற்போது போன்றே நடாத்தினார்கள்.

இரண்டாவது தடவையாக 2001 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி எஸ்.பி திஸாநாயக்க போன்றவர்களை தம் பக்கம் இழுத்து ஆட்சியை கவிழ்த்தது. தற்போது மூன்றாவது முறை.

இவர் தோல்வி அடைந்தே வீட்டுக்குச் சென்றார். ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசை பிரேமதாசவிடம் கையளித்து விட்டு சென்றார். டி.பி.விஜயதுங்க என்னிடம் கையளித்து விட்டு சென்றார். நான் போட்டியிட்ட எந்தவொரு தேர்தலிலும் தோல்வி அடையவில்லை. மூன்றாவது தடவையாக நான்காவது தடவையாக போட்டியிடுமாறு பலர் என்னிடம் கூறினார்கள். மகிந்த ராஜபக்ஷ செய்ததைப்போன்று அரசியலமைப்பை மாற்றியமைக்கச் சொன்னார்கள்.

அதனை என்னால் செய்ய முடியாது என கூறிவிட்டு நான் வீட்டிற்குச் சென்றேன். நான் ஜனநாயகவாதி. இரண்டு தடவைகள் இருந்துவிட்டு மற்றுமொருவருக்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

கைகளைப் பிடித்துச் சென்று மகிந்த ராஜபக்ஷவை நான் தான் கதிரையில் அமர்த்தினேன். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரின் ஆதரவாளர்கள் மகிந்த ராஜபக்ஷவின் விடயங்கள் தொடர்பில் தெளிவுடன் இருக்க வேண்டும். இவர்கள் பாரியளவில் கொள்ளை அடித்துள்ளனர் என்றார்.

தனிப்பட்ட ரீதியாக அது எனக்கும் தெரியும். அதனை உறுதிப்படுத்த வேண்டிய சந்தர்ப்பம் வரும் வரையில் காத்திருக்கின்றோம். நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டிய விடயங்களை தேடிச்செல்கின்றோம். ராஜபக்ஷவிடம் ஒரு விடயத்தை நான் தெளிவாக கூறவேண்டும். அவர் இந்த நாட்டின் நான்காவது ஜனாதிபதி. மூன்று ஜனாதிபதிகள் ஓய்வு பெற்றவிதம் அவர்கள் அவற்றுக்குப் பின்னர் செயற்பட்ட விதம் போன்றவற்றை கவனத்தில் கொண்டு அவ்வாறு செயறபட முயற்சிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தனது சகோதரர்கள், புதல்வர்கள், மனைவி மற்றும் அவர்களது சகோதரர்கள் அவர்களின் உறவினர்கள் என 283 பேரைக் கொண்ட தனது ஆட்சியில் ஆறு அமைச்சுக்களை நிர்வகித்தார். ஆனால் 1600 பேர் அதற்கு பின்னால் காணப்பட்டனர். சம்பள தினத்திற்கு மாத்திரம் வந்து அதனை பெற்றுக்கொள்ளும் பலர் இருந்தனர். அவர்கள் பாரியளவில் கொள்ளையிட்டுள்ளனர்.

நாட்டை அழிவில் இருந்து மீட்கும்போது உண்மையாகவே நாட்டை நேசிப்பவராயின் ஓரமாக இருக்குமாறு அவரை நான் கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அந்த அழிவுக்கு நீங்கள் தயாரானால், அதனை எதிர்கொள்ள நாங்களும் தயார். நான் தனியாக இதனைக் கூறவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் என்ற வகையிலேயே இதனைக் கூறுகின்றேன். இதனை விட நான் எதனையும் கூறுவதற்கு விரும்பவில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்றத் தேர்தலில் 3 கூட்டணிகள் களமிறங்கும்?

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் முக்கிய மூன்று கூட்டணிகள் களமிறங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலும் இக்கூட்டணிகள் அமைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முகம்கொடுப்பதற்கு கிராமிய மட்ட பிரசார நடவடிக்கைகளை இக்கூட்டணிகள் ஆரம்பித்துள்ளதாகவும் உத்தியோகபூர்வ வட்டாரங்களை ஆதாரம் காட்டி நேற்றைய ஞாயிறு சிங்கள இதழொன்று அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களுடன் இணைந்து கூட்டணியாகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளுடன் இணைந்து கூட்டணியாகவும், மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து கூட்டணியாகவும் களமிறங்குவதற்குத் தேவையான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மகிந்தவுடன் இணைந்தோர் அரசியல் அநாதைகள் அல்ல

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)



மகிந்தவுடன் சேர்ந்திருப்பவர்கள் அரசி யல் அனாதைகள் அல்லர். மககளின் கருத்தை சரியாக விளங்கிக் கொண்டவர்கள். மகிந்த மீண்டும் அரசியலுக்கு வந்தால், ஐக்கிய தேசியக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் செல்ல இடமில்லாமல் போகும் என்ற பயத்துடன் காணப்படுவதாக மேல் மாகாணசபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மகிந்தவுடன் இணைந்திருப்பவர்கள் அரசியல் அநாதைகள் எனக் கூறப்படுகிறதே என சிங்கள வார இதழொன்று வினவியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

# சுதந்திரக்கட்சியுடன் இணைந்து இடதுசாரி கட்சிகள் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து போட்டியிட இடதுசாரி கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஏற்கனவே கடந்த பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் செய்துக் கொண்ட உடன்படிக்கைகள் ரத்தாகியுள்ள நிலையிலேயே இந்த உடன்பாடு குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையுடன் பேசவுள்ளதாக லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இடதுசாரி கட்சிகளை பொறுத்தவரை எதிர்காலத்தில் தேசிய கூட்டமைப்பு ஒன்றுடன் இணைந்து போட்டியிடுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் என்ன நடக்கப் போகிறது என்பது கடவுளுக்கே தெரியும் என்று விதாரண குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இடதுசாரி கட்சி தலைவர்களான டியு குணசேகர, திஸ்ஸ விதாரணவை தவிர வாசுதேவ நாணயக்கார, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது

# ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை?

கலைத்து பொதுத்தேர்தலை நடாத்த அரசாங்கம் தயாரானால் அதைத் தடுப்பதற்கு ஜனாதி பதிக்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணையொன்றை முன் வைக்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் ஒரு தரப்பினர கவனம் செலுத்தி வருவதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. குறிப்பிட்ட கையொப்பங்களுடன் ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணை கையளிக்கப்படும் பட்சத்தில் அதனை சபாநாயகர் ஏற்றுக்கொண்டதன் பின்னர் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னர் நாடாளுமன்றத்தை ஜனாதிபதியால் கலைக்க முடியாது என்பதே இந்த அரசியல் குற்றப் பிரேரணையின் நோககமாகும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி குறிப்பிட்ட காலத்துக்கு முன்னர் நாடாளுமன்றத்தை கலைப்ப தற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை மீதான நடவடிக்கை செப்ரெம்பருக்கு பின்னர் எப்படி?

## தீர்மானம் இல்லை என்கிறது அமெரிக்கா

(கொழும்பு)

செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னர், இலங்கையில் தொடர்பாக எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது குறித்து அமெரிக்கா இன்னமும் தர்மானம் எதையும் எடுக்கவில்லை என்றும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், உதவிச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தின் முடிவில், செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத் தின், ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ரொம் மாலி னோவ்ஸ்கி,

இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நடாத்திய விசாரணை அறிக்கை செப்ரெம்பரில் வெளியிடப்படவுள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வெளியிடப் போகும் அறிக்கையில், என்ன உள்ளது என்று எமக்குத் தெரியாது.

இலங்கை இப்போதிருந்து வரும் செப்ரெம்பருக்கும், எல்லா இலங்கையர்களும் ஏற்றுக் கொள்ளத்தக்க உள்நாட்டுப் பொறிமுறையை உருவாக்கும் என்று நம்புகிறேன்.

செப்ரெம்பருக்குப் பின்னர் என்ன நடக்கும் என்று இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

அனைக்குலக சமூகத்தின் தீவிரமான ஆர்வம் தொடரு என்பதை என்னால் கூற முடியும் என்று குறிப்பிட்டார்.



இந்தச் செய்தியாளர் சந்திப்பில, புதிய அரசாங்கத்தை பாராட்டிய அவர், ஒரு ஆண்டுக்கு முன்னர், தான் இங்கு வந்திருந்தால், கலந்துரையாட்ல்களை நடாத்தியிருக்க முடியாது.

அரசாங்கத்துடன் கலந்துரையாடப்படும் ஒவ்வாரு பிரச்சினையும் நிராகரிக்கப்பட்டிருக்கும்.

இப்போது, பிரச்சினைகள் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றைத் தீர்ப்பதற்கு, கூட்டு முயற்சி முன்னெடுக்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

# ஆயுதப்படைகளிடமுள்ள பொலிஸ் அதிகாரம் நீக்கம்

## ஆலோசித்து வருகிறது அரசு

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ், பொலிஸ் அதிகாரங்களை ஆயுதப் படைகளுக்கு வழங்கும், உத்தரவை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.


இந்த உத்தரவை நீடிப்பது அவசியமற்றது என்று, சிறிலங்கா அரசாங்கத்தின் 100 நாள் செயற்றிட்டம் கண்டறிந்துள்ளதாக, அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

பொலிஸாரால் கட்டுப்படுத்தப்பட முடியாத தீவிரமான சூழ்நிலைகளில், சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கு, ஆயுதப் படைகள் அழைக்கப்பட முடியும்.

அத்தகையதொரு தேவை ஏற்பட்டால், ஆயுதப்படைகளை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கொண்டு வருவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ், ஆயுதப் படைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்கும் வர்த்தமானி அறிவிப்பு முன்னைய அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டு வந்தது.

அதனை தற்போதைய அரசாங்கமும், நீடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய இரதோற்சவம் நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்ற போது...(48)

# அரச காணிகளில் குடியிருப்போருக்கு விரைவில் காணிகள் வழங்க ஏற்பாடு

## விஜயகலா மகேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அரச காணிகளில் குடியிருக்கும் மக்களின் காணிகள் மிக விரைவில் அவர்களிடம் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என மகளிர் விவகார பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.


தென்மராட்சி, அல்லாரை தும்புத் தொழிற்சாலையில் பயிற்சி பெற்ற 32 பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 30 வருட யுத்தத்திலிருந்து நாம் மீண்டெழ வேண்டியவர்களாக உள்ளோம்.

எமது மகளிர் பல்வேறு இழப்புகளின் மத்தியிலும் மன உளைச்சல்களுடன் தமது வாழ்க்கையை ஆரம்பித்துள்ளனர். அவர்களுடைய மனம் ஆற்றுப்படுத்தப்பட்டு அவர்களது எதிர்காலம் வளமானதாக அமைய வழிவகைகள் செய்யப்பட வேண்டும். அதற்காகவே நான் இப் பெண்கள் விவகார அமைச்சினைப் பொறுப்பேற்றுக் கொண்டேன். அதன் மூலம் பெண்களது சுயதொழில் ஊக்குவிக்கப்பட்டு அவர்களது பொருளாதாரம் மேம்படுத்தப்படும். இங்கு பயிற்சி பெற்ற பெண்கள் க.பொ.த(சா/த) மற்றும் (உ/த) சித்தியெய்தியவர்களாக உள்ளனர்.

அரச சேவையில இருக்க வேண்டிய தகுதிகள் இருந்தும் அவ் வாய்ப்பினைப் பெறமுடியாதவர்களாக உள்ளனர். அத்துடன் வேலையில்லாது பல இளைஞர்கள் இப் பகுதியில் உள்ளனர். குற்றச்செயல்கள் இங்கு அதிகரித்துக்காணப்படுகிறது. தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளும்போது குற்றச்செயல்கள் குறைவடையும் என எதிர்பார்க்கலாம் எனக் குறிப்பிட்டார்.(11)

# சமய அறிவுப் பரீட்சை



(யாழ்ப்பாணம்)


மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய 2015ஆம் ஆண்டுக்கான பிரமோற்சவத்தினை முன்னிட்டு சமய அறிவுப் பரீட்சை நேற்று முன்தினம் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மண்டபத்தில் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரமோற்சவத்தினை முன்னிட்டு சமய அறிவுப் பரீட்சை இடம்பெறுவது இதுவே முதன் முறையாகும். ஐந்து பிரிவுகளாக இடம்பெற்ற பரீட்சையில் 350. மாணவர்கள் வரையில் ஆர்வத்தோடு பங்குபற்றினர். இப் பரீட்சையின் முடிவுகள் சப்பறத்திருவிழாவன்று இரவு வெளியிட உத்தேசித்துள்ளதாக போட்டியின் ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (48)

# குருநாகல் மாணவர்கள் யாழ் வருகை

கல்வியமைச்சின் "அன்பின் கல்விக்கூடம்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குருநாகல் மகிந்த கல்லூரி மாணவர்கள் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலைக்கு நாளை வருகை தரவுள்ளனர். இனங்களுக்கிடையேயான நட்புறவைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக சிங்களப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களின் பாடசாலைகளிற்கு வருகை தரவுள்ளனர். இந்த வேலைத்திட்டம் 2014 ஆம் ஆண்டு முதல் தென்பகுதிப் பாடசாலைகளிற்கும், வடபகுதி பாடசாலைகளிற்கும் இடையே செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு அங்கமாகவே மகிந்த கல்லூரியைச் சேர்ந்த 40 மாணவர்களும், 14 ஆசிரியர்களும், கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலைக்கு வருகைதரவுள்ளனர். இவர்களைக் கலாசார ரீதியாக வரவேற்பதற்கான ஏற்பாடுகளையும், கலாசாரப் பரிமாற்றத்திற்கான கலை நிகழ்வு ஏற்பாடுகளையும் பாடசாலைச் சமூகம் மேற்கொண்டு வருகின்றது. இரு பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் தங்கள் தங்கள் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வண்ணம் உடை அணிந்து வரவேற்கவுள்ளமை இந்நிகழ்வின் முக்கிய அம்சமாகும். (06)



**யாழ் தீவகம் மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வைரவருக்கும் 50 அடி உயரத்தில் மிகப் பிரமாண்டமாக, அழகிய வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திற்கும் மகா கும்பாபிஷேகம் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.**

# க.பொ.த (சா/த) பெறுபேறுகள்

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் முன்னணிப் பெறுபேறுகள் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

யா/கோண்டாவில் இந்துக கல்லூரி,

உபவிந்தா 8ஏ,சி, த.கோபிகா 7ஏ,பி,சி, சு.சியாளினி 4ஏ,சி, எஸ், கோ.கஜனி 3ஏ,3பி,சி, 2எஸ், சி.றக்சனாத் 2ஏ,3பி,2சி, எஸ், சி.சதுர்சன் 2ஏ,2பி,3சி, எஸ், சு.கோபிநாத் 2ஏ,பி,4சி, எஸ், த.துளசி 2ஏ,5சி,எஸ்.

நாகர் கோவில் ம.வித்தி

பி.ரனிஸ்ரலா 3ஏ,4பி,சி, எஸ், ரீ.கௌசிகா 2ஏ,3பி,சி, 2எஸ், எஸ்.ஹரிதாஸ் 2ஏ,3சி, 2எஸ், எஸ்.நிறஞ்சனா ஏ,3சி, 2எஸ், பீ.சிந்துஜா ஏ,2சி,3எஸ்

# முரசின் இன்றைய பலன்

(06.04.2015 திங்கட்கிழமை

ஜய வருஷம் பங்குனி மாதம் 23 ஆம் திகதி.
அமிர்த யோகம். துதியைத் திதி
சுவாதி நட்சத்திரம் பி.இ. 03.17 வரை. பின் விசாகம்.
இராகுகாலம் 07.38-09.08 வரை சுபநேரம் 12.08 - 01.38 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
பழுதடைந்த உணவுப் பொருட்களினால் தேக ஆரோக்கியம் பாதிக்கப்படல்.

**ரிஷபம்**
தொடுத்த வழக்கின் முடிவு சாதகமான முடிவினைத்தர இறைவனை மன்றாடுதல்.

**மிதுனம்**
கண்டிக்க முயன்ற வேளை பெற்றோர் பிள்ளை உறவில் விரிசல் ஏற்படல்.

**கடகம்**
தாயின் உடல் நிலை சுகம் பெறல்.

**சிம்மம்**
ஆலய பரிபாலன சபையில் வகித திருந்த பதவியினின்றும் விலக முஸ்தீபு.

**கன்னி**
பழையதை மெருகூட்டி விற்க முயன்ற வேளை பரிசோதித்ததால் கொள்வனவு செய்யப் பின் வாங்குதல்.

**துலாம்**
முகவரின் திருகுதாளத்தினால் பயணம் கேள்விக்குறியாதல்.

**விருச்சிகம்**
விபத்தினால் வாகன சேதம் ஏற்பட்ட வேளை உயிர் தப்பி விடல்.


**தனுசு**
கணக்கில் சந்தேகம் இருந்ததினால் தொடர்பினை அறுத்து விடல்.

**மகரம்**
இழுபட்ட வங்கிக்கடன் கிடைக்கும் செய்திவரல்.

**கும்பம்**
போலியான நகை, பணம் கைக்கெட்டும் அபாயம் வரலாம்.

**மீனம்**
சுற்றாடல் சுத்தம் பேணியதால் பாராட்டுப்பெறுதல்.

# கடந்த எட்டு மாதம் என் வாழ்க்கை இருண்ட யுகம்



(லாகூர்)

பந்து வீச்சு சர்ச்சை காரணமாக கடந்த எட்டு மாதங்கள் என் வாழ்க்கை இருண்ட யுகம் போன்று அமைந்துவிட்டது என பாகிஸ்தான் அணியின் சுழற் பந்துவீச்சாளர் சயிட் அஜ்மல் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் சயிட் அஜ்மல். இவர் விதிமுறையை மீறி பந்து வீசியதால் தடை விதிக்கப்பட்டது. பந்து வீச்சு முறையை சரி செய்ததால் தடை விலக்கப்பட்டது.

இது குறித்து அவர் கூறியதாவது: கிரிக்கெட் விளையாடாமல் இருந்த நாட்கள் கடினமானவை. எட்டு மாதங்கள் மிகவும் கஷ்டத்தை அனுபவித்தேன். என் வாழ்க்கையில் இந்த நாட்கள் இக்கட்டான காலம் என்றார்.

தடை விலகி உள்ளதால் சயிட் அஜ்மல் பங்களாதேஷ் தொடருக்கான பாகிஸ்தான் அணியில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எட்டாவது முறையாக பட்டம் மியாமி ரென்னிஸில் செரீனா



(மியாமி)

அமெரிக்காவில் நடைபெற்று வரும் மியாமி ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் உலகின் முதல்நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் 8ஆவது முறையாக பட்டம் வென்று அசத்தியுள்ளார். இப்போட்டியில் வென்றதன் மூலம் ரென்னிஸ் விளையாட்டின் எலைட் கிளப்பில் செரீனா இடம் பிடித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் சுவாரெஸ் நவரோவை எதிர்கொண்ட செரீனா 6-2, 6-0 என்ற செட் கணக்கில் வீழ்த்தி வெற்றியை தனதாக்கினார். 56 நிமிடங்கள் நடைபெற்ற இப்போட்டியில் தொடர்ந்து 10 கேம்களை செரீனா கைப்பற்றி அசத்தினார். எனினும் முதல் செட்டில் 2-2 என்ற கணக்கில் சற்று கடுமையான போட்டியை நவரோவா கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

தனது வெற்றி குறித்து செரீனா கூறுகையில், 8ஆவது முறையாக பட்டம் வென்றது மகிழ்ச்சி அளிக்கிறது. பழமையான போட்டியில் பட்டம் வெல்வதையும், சிறப்பு மிகுந்த பட்டத்தையும் நான் பெரிதும் விரும்புகின்றேன். அடுத்து வரும் தொடர்கள் சவால் நிறைந்தது. அதற்கான தொடர் பயிற்சிகளை மேற்கொள்ள விரும்புகின்றேன். சாதிக்க வேண்டும் என்ற வேகம் உள்ளவரை ரென்னிஸ் களத்தில் என்னால் ஜொலிக்க முடியும் என்று நம்புகின்றேன். அதற்கு துணை புரியும் இறைவனுக்கு நன்றிகள் பல கோடி என்றார்.

## புதிய உத்வேகத்துடன் ஜொலிப்போம்

பழையவற்றை மறந்து புதியதை நோக்கிப் பயணிக்கும்போதுதான் சிறந்த நிலையை எட்ட முடியும். அந்த வகையில் கடந்த கால கசப்பான சம்பவங்களையும் தோல்விகளையும் மறந்து புதிய உத்வேகத்துடன் செயற்பட உள்ளோம் என இங்கிலாந்து அணியின் டெஸ்ட் கப்டன் குக் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் பாரம்பரியத்தை கொண்ட நாடு என்ற சிறப்பை நாங்கள் பெற்றிருக்கின்றோம். இதன் காரணமாக எங்கள் அணி மீதான எதிர்பார்ப்பு இரசிகர்கள், விமர்சகர்கள் இடையே பெரியளவில் விவாதிக்கப்படுகின்றன. இதில் ஒரு முக்கிய அம்சம்தான் அண்மையில் நடைபெற்ற 11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் முதல் சுற்றிலிருந்து எங்கள் அணியின் வெளியேற்றம் பார்க்கப்படுகின்றது. இது போன்ற நிலைமைகள் எல்லா அணிகளுக்கும் இருக்கின்றது. இது குறித்து நான் அதிகம் கதைக்க விரும்பவில்லை. மேற்கிந்தியத்தீவுகள், அவுஸ்ரேலிய அணிகளுடன் அடுத்து நடைபெறவுள்ள டெஸ்ட் தொடர் குறித்து நாங்கள் அதிகம் சிந்திக்கின்றோம். இரு அணிகளுமே சிறந்த வேகப்பந்து வீச்சாளர்களைக் கொண்டுள்ளன. அதற்கு எதிராக எப்படி செயற்படவேண்டும் என்ற எண்ணமே எனக்குள் ஓடிக்கொண்டிருக்கின்றது. ஊடகங்களில் வெளியாகும் தேவையற்ற கருத்துக்களுக்குப் பதில் அளிக்கும் அதிகாரியும் நானல்ல. என்னைப் பொறுத்த வரை இங்கிலாந்து அணிக்கு என்னாலான சேவையை நிறைவாக வழங்க வேண்டும் என்பதே என் நோக்கம் என்றார்.

## வேண்டும் முன்னேற்றம் டெஸ்ட் கிரிக்கெட்டில்



(அமதாபாத்)

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி இன்னும் முன்னேற்றம் காண வேண்டியது அவசியமானதாகும் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் ராகுல் ராவிட் தெரிவித்துள்ளார்.

ரஞ்சி கிரிக்கெட் போட்டியின் செயற்பாட்டின் அடிப்படையில் வீரர்கள் அணித் தேர்வில் கருத்தில் கொள்ளப்படுகிறார்கள். எனவே ரஞ்சி கோப்பை கிரிக்கெட் போட்டியில் இளம் வீரர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதே எனது அறிவுரையாகும்.

உள்ளூர் போட்டிகளில் தொடர்ந்து வெற்றிகரமாக செயற்படாவிட்டால், அடுத்து வரும் ஐ.பி.எல். போட்டிகளில் உங்களால் சாதிக்க முடியாது.

அவுஸ்ரேலிய சூழ்நிலையில் அவுஸ்ரேலிய அணி எப்போதும் எங்கள் அணியை விட சிறந்த அணியாகும். அதனை ஒப்புக்கொள்வதில் எந்தத் தவறும் இல்லை.

உலக கோப்பை போட்டியில் இந்திய அணியின் ஆட்டம் நன்றாக இருந்தது. இந்திய அணியில் இளம் வீரர்கள் பலர் இருப்பதால் அவர்கள் அடுத்த உலக கோப்பையில் விளையாட முடியும்.

இருப்பினும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி இன்னும் முன்னேற்றம் காண வேண்டியது அவசியமானதாகும் என்று தெரிவித்தார்.


# ஐ.பி.எல். ஆரம்ப விழா நாளை

## இரசிகர்களை மகிழ்விக்க அனுஷ்கா சர்மா, ருத்திக் ரோஷனின் நடன விருந்து

INDIAN PREMIER LEAGUE

ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் ஆரம்ப விழாவில் இந்தி சினிமா பிரபலங்கள் ருத்திக் ரோஷன், அனுஷ்கா சர்மா உள்ளிட்டோர் நடனமாடி இரசிகர்களை மகிழ்விக்க காத்திருக்கிறார்கள். 8ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது. முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும், மும்பை இந்தியன்ஸ் அணியும் கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் மோதவுள்ளன. போட்டிக்கு ஒரு நாளுக்கு முன்பாக அதாவது நாளை கொல்கத்தா சால்ட்லேக் மைதானத்தில் பிரமாண்டமான ஆரம்ப விழாவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இரவு 7.30 மணிக்கு ஆரம்பிக்கும் ஆரம்ப விழாவில் பிரபலங்களின் கண்கவர் நடனம், கலை நிகழ்ச்சி, லேசர் ஒளி வெள்ளத்தில் இசை விருந்து என்று மொத்தம் 2 மணி நேரம் நடைபெறும். சோனி சிக்ஸ், சோனி மைக்ஸ் தொலைக்காட்சிகள் இதை நேரடி ஒளிபரப்பு செய்கின்றன. இந்த நிலையில் ஆரம்ப விழாவில் அசத்தப்போகும் கலைஞர்கள் யார்-யார் என்ற விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தி நடிகையும், கிரிக்கெட் வீரர் ஹோலியின் காதலியுமான அனுஷ்கா சர்மா, இந்தி நட்சத்திரங்கள் ருத்திக் ரோஷன், சாகித் கபூர், பர்ஹான் அக்தர் ஆகியோரின் நடனத்துடன், இசை அமைப்பாளர் பிரிந்தமும் கைகோர்க்கிறார். இந்தி நடிகர் சயிப் அலி கான் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கவுள்ளார்

## பந்துவீச்சில் மிரட்டுவோம்



நடப்பு ஐ.பி.எல். ருவென்ரி-20 பெங்களூர் அணி பந்து வீச்சில் மிரட்டுவோம் என அந்த அணியின் பயிற்றுவிப்பாளரும், தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரருமான அலன் டொனால்ட் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நடப்பு ஐ.பி.எல். போட்டியில் பெங்களூர் அணி சிறப்பாகச் செயற்படும். மீண்டும் பந்து வீச்சில் கலக்குவோம். மிச்சல் ஸ்ரார்க் (அவுஸ்ரேலியா) மிலன் (நியூசிலாந்து) ஆகியோர் காயத்தால் விலகியுள்ளனர்.

ஸ்ரார்க் மூன்று வாரம் ஓய்வில் இருப்பார். இதனால் அவர் மூன்று போட்டிகளில் விளையாட முடியாது. அதன் பின் அணிக்கு திரும்புவார். அவர் இல்லாதது சிறிது பின்னடைவுதான். ஆனாலும் பெங்களூர் அணியின் பந்து வீச்சு பலமாகவே உள்ளது. அவர்களுக்கு பதில் சீன் அபோட், டேவிட் வைஸ் ஆகியோர் அதை ஈடு செய்வார்கள். இந்தியாவைச் சேர்ந்த சிறந்த பந்து வீச்சாளர்களும் இருக்கிறார்கள். வருண் ஆருண், அசோக் திண்டா, சந்தீப் வாரியர், அபு நசீம் அகமது, ஹர்ஷல் பட்டேல் போன்ற வீரர்கள் இருக்கிறார்கள். இதனால் பந்து வீச்சாளர்களைத் தேர்வு செய்வது கடினமாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பஞ்சாபின் ஆதிக்கம் மீண்டும் தொடரும்

## மைக்ஸ்வெல், அக்சர் பட்டேல் அணியின் சொத்து என்கிறார் சேவாக்



நடப்பு ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் அணி மீண்டும் ஆதிக்கம் செலுத்தும் என்ற நம்பிக்கை உள்ளதாக அந்த அணியின் அதிரடி வீரர் சேவாக் தெரிவித்துள்ளார்.

கடந்த ஐ.பி.எல். தொடரில் பட்டையைக் கிளப்பிய பஞ்சாப் அணி இறுதிப் போட்டி வரை முன்னேறியது. ஆனால் கடைசி ஆட்டத்தில் கொல்கத்தா அணியிடம் தோல்வியைத் தழுவி சம்பியன் பட்டத்தை தவறவிட்டது.

இந்நிலையில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள 8ஆவது ஐ.பி. எல். தொடரில் பஞ்சாப் அணி மீண்டும் சாதிக்க தயாராகவுள்ளது என்று சேவாக் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், கடந்த ஆண்டு பஞ்சாப் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியதற்கு பயிற்சியாளர் சஞ்சய் பங்கார் முக்கிய காரணம். வீரர்களுக்கு முழு சுதந்திரம் அளிக்கும் இவர், நண்பரைப்போல பழகுவார். வீரர்களின் பலம், பலவீனம் குறித்து நன்கு அறிந்தபின் பயிற்சி வழங்குவது இவரது தனிச்சிறப்பு. கடந்த ஆண்டைப் போல, இம்முறையும் பஞ்சாப் அணி முழுத்திறமையை வெளிப்படுத்தி சாதிக்க முயற்சிக்கும். கடந்த தொடரில் பஞ்சாப் அணிக்காக விளையாடிய நிறைய வீரர்கள், உலகக்கிண்ணத்திற்கான தங்கள் நாட்டு அணியில் இடம் பிடித்தது மகிழ்ச்சியான விடயம். சமீபத்திய உலகக்கிண்ணத் தொடரில் அசத்திய அவுஸ்ரேலியாவின் மைக்ஸ்வெல், இந்தியாவின் அக்சர் பட்டேல் ஆகியோர் மீது அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

உலகக்கிண்ணத் தொடர் முடிந்து 10 நாட்களுக்குப் பின் தான், ஐ.பி. எல். தொடர் ஆரம்பமாகவுள்ளதால், வீரர்கள் சோர்வடைய வாய்ப்பு இல்லை. ஏற்கனவே இதுபோன்ற சூழ்நிலையில் விளையாடிய அனுபவம் வீரர்களுக்கு உள்ளது என்று கூறியுள்ளார்.

# தொண்டைமானாறு கலைவாணியின் கரப்பந்து இறுதியில் ஆவரங்கால் இந்து, ஆவரங்கால் மத்தி



ஆவரங்கால் இந்து



ஆவரங்கால் மத்தி

தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஏ பிரிவுக்கான இறுதிப் போட்டிக்கு ஆவரங்கால் இந்து மற்றும் ஆவரங்கால் மத்தி அணிகள் முன்னேறியுள்ளன.

தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக்கழகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் மாபெரும் கரப்பந்தாட்டப் போட்டித் தொடரை நடாத்தி வருகின்றது.

ஏ, பி என இரு பிரிவுகளாக நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடரின் ஏ பிரிவுக்கான அரையிறுதிப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

ஏ பிரிவுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் ஆவரங்கால் மத்தி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் மத்தி அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

ஏ பிரிவுக்கான இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் புத்தூர் கலைமதி அணியும் மோதின. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து பி பிரிவுக்கான போட்டிகள் நடைபெற்றன. பி பிரிவுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் இளவாலை மத்தி அணியும் நாயன்மார்கட்டு பாரதி அணியும் மோதின. இதில் இளவாலை மத்தி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணியும் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியும் மோதின. இதில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (93)

விளையாட்டு செய்திகள்

## நாகம்மாள், ஜேம்ஸ் முன்னேற்றம்

அராலி அண்ணா விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு தெல்லிப்பளை நாகம்மாள், அராலி ஜேம்ஸ் அணிகள் முன்னேறியுள்ளன.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அராலி அண்ணா விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடர் அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரின் இரு ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன. இதில் முதலாவது போட்டியில் தெல்லிப்பளை நாகம்மாள் அணியும் பண்டத்தரிப்பு பிறைஸ்ரார் அணியும் மோதின. தெல்லிப்பளை நாகம்மாள் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

மற்றுமொரு போட்டியில் அராலி ஏ.எல். அணியும் அராலி ஜேம்ஸ் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் அராலி ஜேம்ஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. (93)

# வென்றது றெட்றேஞ்சர், றோயல்

(அச்செழு)

அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் கால்பந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் மானிப்பாய் றெட்றேஞ்சர், ஊரெழு றோயல் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டப் போட்டி உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் புத்தூர் விக்னேஸ்வரா அணியும் மானிப்பாய் றெட்றேஞ்சர் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மானிப்பாய் றெட்றேஞ்சர் அணி அடுத்தடுத்து கோல்களைப் போட்டு முன்னிலை பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் புத்தூர் விக்னேஸ்வரா அணி செயற்பட்டபோதிலும் அது வெற்றிக்கு வித்திடவில்லை. இறுதியில் மானிப்பாய் றெட்றேஞ்சர் அணி 5-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றுமொரு போட்டியில் ஊரெழு றோயல் அணியும் எல்லாளன் அணியும் மோதின. இதில் ஊரெழு றோயல் அணி 11-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இன்றைய தினம் இரு போட்டிகள் நடைபெறவுள்ளன. முதல் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் பலாலி விண்மீன் அணியும் மோதவுள்ள அதேவேளை, இரண்டாவது போட்டியில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணியும் புத்தூர் கலைமதி அணியும் மோதவுள்ளமை நறிப்பிடத்தக்கது. (93)

# சுதேசிய கொண்டாட்ட கரப்பந்து அரையிறுதி ஆட்டங்கள் இன்று

சுதேசிய கொண்டாட்ட கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்களுக்கு ஆவரங்கால் இந்து இளைஞர், அச்சுவேலி ஸ்ரார், உடுப்பிட்டி நவஜீவன்ஸ், புத்தூர் கலைமதி அணிகள் முன்னேறியுள்ளன.

அரியாலை 96ஆவது சுதேசிய கொண்டாட்ட விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடர் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதன் லீக் சுற்று ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன. ஏ பிரிவுக்கான போட்டி ஒன்றில் யாழ். பல்கலைக்கழக அணியும் அச்சுவேலி ஸ்ரார் அணியும் மோதின. இதில் அச்சுவேலி ஸ்ரார் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றுமொரு போட்டியில் புத்தூர் கலைமதி அணியும் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் மோதின. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் யாழ். பல்கலைக்கழக அணியும் மோதின. இதில் நவஜீவன்ஸ் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றுமொரு போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் அணியும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோதின. இதில் நவஜீவன்ஸ் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்றது. லீக் சுற்று முடிவில் புள்ளிகள் அடிப்படையில் நான்கு அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

இந்நிலையில் அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் நடைபெறவுள்ளன. இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் அச்சுவேலி ஸ்ரார் அணியும் மோதவுள்ள அதேவேளை, இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் புத்தூர் கலைமதி அணியும் மோதவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

# விரைவில் மாவட்ட கரப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் அதன் அங்கத்துவ அணிகளுக்கிடையில் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரை இம்மாத நடுப்பகுதியில் நடாத்தவுள்ளது.

இப்போட்டித் தொடர் ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் நடாத்தப்படவுள்ளதுடன் ஆண்களுக்கான போட்டிகள் ஏ, பி என இரு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டியை சிறப்புற நடாத்துவதற்கான ஏற்பாடுகள் யாவும் தற்போது முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அங்கத்துவ அணிகள் அனைத்தும் இப்போட்டியில் கட்டாயம் பங்குபற்றவேண்டும் எனவும் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் மனோகரன் தெரிவித்துள்ளார். (93)

# மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டம் யாழ். மத்தியில் இன்று அரையிறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் அதன் அங்கத்துவ அணிகளுக்கிடையில் நடாத்தி வரும் மாபெரும் கூடைப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நாளை மறுதினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆண், பெண் என இரு பிரிவுகளில் நடாத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் நடைபெற்றன.

இந்நிலையில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள ஆண்கள் பிரிவின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். சென்றலைட்ஸ் அணியும் யாழ். பல்கலைக்கழக அணியும் மோதவுள்ள அதேவேளை, இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் பற்றீசியன்ஸ் அணியும் ஜொலிஸ்ரார் அணியும் மோதவுள்ளன.

பெண்கள் பிரிவின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய அணியும் கொக்குவில் ஐக்கிய அணியும் மோதவுள்ள அதேவேளை, இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சுன்னாகம் இராமநாதன் அணியும் யாழ். பமிலியூரீஸ் அணியும் மோதவுள்ளன.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டங்கள் இம்மாத நடுப்பகுதியில் நடாத்தப்படவுள்ளதாகவும் இப்போட்டிகளில் வெற்றியீட்டும் அணிகளுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும், போட்டியின் ஆட்டநாயகன், தொடர் நாயகன் மற்றும் சிறந்த சூட்டருக்கான விருதுகள் என்பன வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கூடைப்பந்தாட்டத்திறனை யாழ். மாவட்ட வீர,வீராங்கனைகளிடையே மேலும் வளர்த்தெடுக்கும் நோக்கிலேயே தாம் இப்போட்டித் தொடரை வருடாவருடம் நடாத்தி வருவதாக யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (93)

# மகிழ்ச்சியில் குப்ரில்

டெஸ்ட் அணியில் மீண்டும் இடம் பிடித்தமை மகிழ்ச்சி அளிக்கின்றது. தேர்வுக்குழுவின் எண்ணங்களை ஈடுசெய்யும் வகையில் களத்தில் செயற்பட முயற்சிப்பேன் என நியூசிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குப்ரில் தெரிவித்துள்ளார்.

இரண்டு வருட இடைவெளிக்குப் பின்னர் நியூசிலாந்து டெஸ்ட் அணியில் இடம்பிடித்தமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே குப்ரில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி வரை முன்னேறியது மகிழ்ச்சி. இருப்பினும் இறுதிப் போட்டியில் படுதோல்விகளைச் சந்தித்தமை ஆறாத வடுவாக இருக்கின்றது. அது ஒரு கெட்ட கனவாகவே நாம் பார்க்கின்றோம். அதிலிருந்து விரைவில் மீண்டு அடுத்த தொடரில் சாதிப்பது குறித்தே அதிக கவனம் செலுத்துகின்றோம். இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாகச் செயற்பட முயற்சிப்பேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மகிந்தவை விடவும் சீனாவுக்கு வேண்டியவராகிவிட்ட மைத்திரி

**- உபுல் ஜோசப் பெர்னான்டோ கட்டுரையிலிருந்து**




**சீ**னாவுக்கு மைத்திரிபால சிறிசேன பயணம் செய்த போது இலங்கையில் சிறுநீரக வைத்தியசாலை ஒன்றை அமைத்துத் தருவதாக சீனா வாக்குறுதி வழங்கியது. இது சீனர்களின் தந்திரோபாயமாக உள்ளது என்பதை வரலாறு கூறுகிறது.

1970 -77 காலப்பகுதியில் ஆட்சிசெய்த பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த அனைத்துலக மாநாட்டு மண்டபத்தை அன்பளிப்பாக வழங்கியது சீனா.

ஜனாதிபதியாக சந்திரிகா பதவி வகித்த போது, இவரது கணவரான பிரபல நடிகரான மறைந்த விஜய குமாரதுங்கவின் நினைவாக கலாசார அரங்கம் ஒன்றை நிர்மாணித்துத் தருவதற்கான விருப்பத்தை சீனா வெளிப்படுத்தியது.

இது பின்னர் நெலும் பொக்குன என்ற பெயரில் திறந்து வைக்கப்பட்டது. இதனைத் திறப்பதற்கான வாய்ப்பை மகிந்த ராஜபக்ஷவே பெற்றிருந்தார்.

மகிந்தவின் சொந்த இடமான அம்பாந்தோட்டையில் சீனாவால் துறைமுகம் மற்றும் விமானநிலையம் போன்றன நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

தற்போது, நாட்டின் வடமத்திய பகுதியில் சிறுநீரக நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இங்கே இந்நோயைக் கட்டுப்படுத்தக் கூடிய முழுமையான வசதிகளைக் கொண்ட வைத்தியசாலை ஒன்றை நிர்மாணித்துத் தருவதாக சீனா வாக்குறுதி வழங்கியுள்ளது.

இலங்கைத் தலைவர்களின் தேவைகள் என்ன என்பதை சீனா நன்கு அறிந்து வைத்துள்ளது என்பதையே சீனாவின் நகர்வுகள் வெளிப்படுத்துகின்றன.

தேர்தல் பரப்புரையின் போது வடமத்திய மாகாணப் பகுதியில் மிகஎளிதாகப் பாதிக்கப்படும் சிறுநீரக நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பேன் என மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி வழங்கியிருந்தார்.

ஆகவே சீனா தற்போது மைத்திரிபாலவுக்கு உதவி செய்ய முன்வந்துள்ளது.

மைத்திரிபால சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொண்டதைத் தொடர்ந்து, மகிந்தவை விட மைத்திரிபால தனக்கு மிகவும் வேண்டியவர் என்பதை சீனா உணர்ந்துள்ளது.

மைத்திரிபால சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொண்ட போது சீனாவில் எவ்வாறான நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை இந்தியா கூர்ந்து அவதானித்தது.

சீனாவைப் போன்று தனது நிதியை அள்ளிவீசுவதற்கு இந்தியா தயாராக இல்லை. இலங்கையில் சீனாவால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுடன் அமெரிக்காவின் ஊடாகப் போட்டியிடுவதென்பதே இந்தியாவின் திட்டமாகும்.

கட்டார் நாட்டின் மன்னர் அண்மையில் கொழும்பிற்கான தனது பயணத்தின்போது, மத்தள விமான நிலையத்தை குத்தகைக்கு எடுப்பதற்கான தனது விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தமை இதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மத்தள விமான நிலையம் சீனாவால் முன்னெடுக்கப்பட்ட திட்டமாகும். இது தற்போது நஷ்டத்தில் இயங்குகிறது. இங்கு தற்போது எவ்வித விமானங்களும் பறப்புக்களில் ஈடுபடுவதில்லை. இந்த நஷ்டத்தை இலங்கையால் ஈடுசெய்ய முடியாது என்பதன் காரணமாகவே கட்டார் அரசு இதனை குத்தகைக்கு எடுப்பதற்கான தனது ஒப்புதலை வழங்கியுள்ளதாகத் தெரிகிறது.

கட்டார் அமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடாகும். தனது நாட்டிற்குச் சொந்தமான அல்-உடையிட் விமானத் தளத்தை அமெரிக்க விமானப் படையினர் பயன்படுத்துவதற்கான அனுமதியை கட்டார் வழங்கியுள்ளது.

அமெரிக்காவின் ஆசியுடனேயே மத்தள விமான நிலையத்தை குத்தகைக்கு எடுப்பதற்கான தனது ஒப்புதலை கட்டார் வழங்கியிருக்கலாம்.

எனினும், சீனாவுக்கான மைத்திரியின் சுற்றுப்பயணத்தைத் தொடர்ந்து, இந்திய மாக்கடலில் உருவாக்கப்படும் எந்தவொரு சீனத் தளங்களும் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் வெளிப்படையாக அறிவித்திருந்தார்.

இந்திய மாக்கடலில் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதானது இந்தியா உட்பட பூகோள மற்றும் பிராந்திய நாடுகளுக்குப் பாதிப்பை உண்டுபண்ணும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக ஒழுங்கில் ஏற்படும் மாற்றமானது அனைத்துலக ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருக்க வேண்டும் எனவும், இந்திய மாக்கடலில் சீனா தனது இராணுவத் தளங்களை உருவாக்குவதானது இப்பிராந்தியத்தின் அமைதிநிலையை நிச்சயம் பாதிக்கும் எனவும் டோவல் சுட்டிக்காட்டியுள்ளார்.

"சீனா தனது செயற்பாடுகளை விரிவுபடுத்துவதானது யதார்த்தமாகும். இதன்மூலம் சீனா வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முற்படுகிறது. அத்துடன் வலுவான இராணுவ மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் விரிவுபடுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது.

சீனாவின் வளர்ச்சி என்பது ஒரு வியத்தகு மாற்றம் என்பது உண்மைதான். சீனா எதைச்செய்தாலும் அது அனைத்துலக ரீதியாகப் பாதிப்பைச் சந்திக்கும் என்பதும் உண்மையாகும். இந்திய மாக்கடல் பிராந்தியமும் பாதிக்கப்படும். இந்தியாவும் இதனால் பாதிக்கப்படும். ஆகவே அனைத்துலக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும் விதமாக உலக ஒழுங்கில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என நாம் கருதுகின்றோம்" என "The Growth Net" என்கின்ற தலைப்பில் மூன்று நாட்களாக இடம்பெற்ற அனைத்துலக கருத்தரங்கில் டோவல் குறிப்பிட்டிருந்தார்.

இந்திய மாக்கடலின் கரையோர பட்டுப்பாதை மூலோபாயம் தொடர்பான சீனாவின் கரையோர முயற்சிகள் தொடர்பாக வினவிய போது, இப்பிராந்தியத்தில் இராணுவத் தளங்களை அமைப்பதன் மூலம் இங்கே மோதல் நிகழ வழியேற் படாது என டோவல் பதிலளித்தார்.

"1971இல் ஐக்கிய நாடுகள் சபையில் இந்திய மாக்கடல் பிராந்தியமானது சமாதான வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இப்பிராந்தியத்தை அமைதி மிக்கதாகத் தக்கவைத்துக் கொள்வதில் இந்தியா ஆர்வங்காண்பித்தது. கடல்சார் பாதைகளில் சுதந்திரமான போக்குவரத்து உறுதிசெய்யப்படும் என நாங்கள் நம்புவோம்" என இந்திய மாக்கடலில் சீனாவின் இலட்சியங்கள் நிறைவேற்றப்படுவது தொடர்பாக இந்தியாவின் கருத்து என்ன என்பதை வினவியபோதே டோவல் இவ்வாறு பதிலளித்தார்.

தனது பட்டுப்பாதை மூலோபாயத் திட்டத்தின் முக்கியத்துவத்தை இலங்கை ஜனாதிபதியின் சீனப் பயணத்தின் போது, சீனா வலியுறுத்தியது. அதேவேளை, சீனாவின் மூலோபாயத்தைத் தோற்கடிப்பதற்கு, இந்தியா, அமெரிக்காவைப் பயன்படுத்த முயற்சிப்பது போல் தெரிகிறது.

இந்தநிலையில், இந்தியா, சீனா மற்றும் இலங்கை ஆகிய மூன்றும் இணைந்து ஏன் பணியாற்றக் கூடாது என சீன அதிபர், இலங்கை ஜனாதிபதியிடம் வினவியதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்ததாக இந்திய ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இந்திய மாக்கடலில் அமெரிக்காவின் பிரசன்னத்தை இந்தியா ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதை வலியுறுத்துகின்ற சீனாவின் திட்டமாக இது இருக்கலாம்.

# இன்டர்நெட் எக்ஸ்புளோரர் இனிமேல் கிடைக்காது

**இ**ன்டர்நெட் எக்ஸ்புளோரர் இனிமேல் கிடைக்காது கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக, மைக்ரோசொப்ட் நிறுவனத்தால், தொடர்ந்து முன்னிறுத்தப்பட்ட இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பிரவுசர் இனி செயற்பாட்டிற்குக் கிடைக்காது. இதற்குப் பதிலாக, விண்டோஸ் 10 வெளிவரும்போது, உடன் கிடைக்கும் பிரவுசரே முதன்மை இடம் பெறும். தற்போது ஸ்பார்டன் (Spartan) என அழைக்கப்படும் இந்த பிரவுசர், இதே பெயருடனோ அல்லது புதிய பெயருடனோ நுகர்வோருக்குக் கிடைக்கும்.

ஸ்பார்டன் பிரவுசர் புதிய வகை இணையச் செயற்பாட்டிற்கான, புதிய கட்டமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. விண்டோஸ் 10 சிஸ்டம் ஒரு சேர்விஸ் செயலியாகத் தரப்பட இருப்பதால், இந்த பிரவுசரையும் அதே அமைப்பில் உருவாக்கி வருகின்றனர்.

இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 11, விண்டோஸ் 10 சிஸ்டத்துடன் இணைந்து செயற்பட முடியாது. எனவே, வாடிக்கையாளர்கள் பயன்படுத்தும் விண்டோஸ் 7 மற்றும் விண் 8.1 சிஸ்டங்களில் இயங்கும் வகையில் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் 11 தொடர்ந்து கிடைக்கும். விண்டோஸ் 10 சிஸ்டத்தினை, விண் 7 மற்றும் விண் 8.1 பயன்படுத்துபவர்களுக்கு இலவசமாக மைக்ரோசொப்ட் தர இருப்பதால், தனிநபர் பயன்பாட்டிற்கு இவற்றைப் பயன்படுத்துவோருக்கு, ஸ்பார்டன் பிரவுசர் அதே பெயரில் அல்லது புதிய பெயரில் கிடைக்கும்.

# அதிரடி தொழில்நுட்ப வசதிகளுடன் விண்டோஸ் மொபைல் போன் சிஸ்டம்




**மொ**பைல் போனில் இயங்கும் அன்ட்ரோய்ட் மற்றும் ஐ.ஓ.எஸ். ஒப்பரேட்டிங் சிஸ்டங்களுக்குச் சவால் விடும் வகையில் நவீன தொழில் நுட்பங்களில் இயங்கும் அதிரடி வசதிகளுடன் விண்டோஸ் 10 மொபைல் போன் சிஸ்டம் வர இருக்கிறது. இதற்கான முன்னோட்டத்தினை, மைக்ரோசொப்ட், அண்மையில் சீனாவில் நடைபெற்ற Win-HEC - Shenzhen 2015 என்ற கருத்தரங்கில் காட்டியுள்ளது.

இதிலுள்ள சில நவீன வசதிகளாவன:

4கே வீடியோ பதிவு (4K Video Recording): அதாவது வீடியோ பதியப்படுகையிலேயே, ஸூம் செய்வதற்கான வசதி, ப்ளாஷ் இயக்கத்தினைத் தனியே கட்டுப்படுத்தும் வசதி, வீடியோ எச்.டி.ஆர். (High dynamic range) சார்ந்த தொழில் நுட்ப வசதிகள் ஆகியன தரப்படுகின்றன.

Wi-Fi Direct trjp: இதன்மூலம் Wi-Fi Network-ல் இணையாமலேயே, பயனாளர்கள் தங்களுக்குள் Wi-Fi இணைப்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம். Wi-Fi Hot Spot வசதியின் மூலம், ஒரு இணைப்பினை, பலர் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

மற்றும் பலவகையான ஓடியோ மேம்பாட்டிற்கான அம்சங்கள், அதன் புளூடூத்டூலில் தரப்படுகின்றன.

அண்மைக் களத் தகவல் தொடர்பு என அழைக்கப்படும் என்.எப்.சி. அனைத்து மொபைல் போன்களிலும் தரப்படுகிறது. விண்டோஸ் 10 மொபைல் சிஸ்டம் இதனை இன்னும் எளிமையாகவும் நவீனமாகவும் அமைக்கிறது.

# நாஞ்சில் நாடனின் "கம்பனின் அம்பறாத்தூணி"

- வளவ. துரையன் -

நவீன எழுத்தாளர்களில் மரபிலக்கியத்தில் ஆழ்ந்த பயிற்சி உள்ளவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அவர்களில் குறிபிடத்தகுந்தவர் நாஞ்சில் நாடன். அவருடைய நூல்களுக்கு அவர் வைத்திருக்கும் சில தலைப்புகளே அதற்கு சாட்சிகளாய் நிற்கின்றன.

சாலப் பரிந்து, என்பிலதனை வெயில் காயும், எட்டுத் திக்கும் மத யானை, நதியின் பிழை யன்று நறும்புனல் இன்மை, காவலன் காவான் எனின், தீதும் நன்றும் என்பன போன்றவற்றைக் கூறிக் கொண்டே போகலாம்.

"கம்பனின் அம்பறாத்தூணி" எனும் இந்நூல் கம்பராமாயண நயங்களை வியந்தோதும் நூல் அன்று என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். கம்பனின் நயங்களைப் பலவகைகளில் எடுத்துக் கூறியும் அவனது நூலைப் பல வழிகளில் ஆய்ந்தும் எண்ணற்ற புத்தகங்கள் நம் தமிழில் வெளிவந்துள்ளன.

ஆனால் நாஞ்சில் நாடனின் இந்நூல் அவற்றினின்று முற்றிலும் மாறுபட்டதாகும். கம்பராமாயணத்தில் கம்பன் எடுத்தாண்டுள்ள சொற்களை ஆய்ந்து அவை எங்கெங்கே என்னென்ன பொருள்களில் வருகின்றன, அவற்றின் வேர்ச் சொற்கள் - எவை, அவை பிற மொழிச் சொல்லா, ஒரே சொல் எத்தனை இடங்களில் வருகிறது, அவை இப்போது என்ன பொருளில் வழங்கப்படுகின்றன போன்றவற்றையெல்லாம் ஆராய்ந்து நாஞ்சில் நாடனின் கடும் உழைப்பால் வெளி வந்துள்ள நூல்தான் "கம்பனின் அம்பறாத்தூணி" ஆகும்.

மொத்தம் 15 அத்தியாயங்களைக் கொண்ட இந்நூல் ஒரு சொற் களஞ்சியமாக விளங்குகிறது எனலாம்.

அம்புகளைச் சேர்த்து வைத்திருக்கும் ஒரு பாத்திரமே அம்பறாத்தூணி ஆகும். அக்கால வில் வீரர்கள் தங்கள் முதுகில் அதைக் கட்டி வைத்திருப்பார்கள். அந்தத் தூணியைப் புட்டில் வட்டில், ஆவம் எனும் சொற்களாலும் கம்பன் குறிப்பதை எடுத்துக்காட்டும் நாஞ்சில் தூணி எனும் சொல் சங்க இலக்கியங்களான அகநானூறு, சிறுபாணாற்றுப்படை, நற்றிணை, முல்லைப்பாட்டு ஆகிய நூல்களிலும் புழங்கி இருப்பதைச் சான்றுகளின் மூலம் எடுத்துக் காட்டுகிறார்.

இந்த நூலுக்கு இப்பெயர் வைத்ததற்குக் காரணம் கூறும் போது,

"இராமனின் அம்பறத்தூணியில் அம்பு அற்றுப் போகாது! கம்பனின் அம்பறாத்தூணியில் சொல் அற்றுப் போகாது. எனவே "கம்பனின் அம்பறாத்தூணி" எனப் பெயரிட்டேன் நூலுக்கு"

என்று கூறுகிறார். அவர் கூற்று. மிகவும் உண்மை என்பதை நாம் நூலில். போகப் போகப் புரிந்து கொள்கிறோம்.




கம்பராமயண சொல்லாய்வில் மூழ்கிப் போகும் நாஞ்சில் எச்சொல்லையும் விடமுடியாமல் தவிக்கிறார். எல்லாமே அவருக்கு இன்றியமையாததாகத் தோன்றுகிறது. எனவே அவர் எழுதுகிறார்.

"பலமரம் கண்ட தச்சன், ஒரு மரமும் வெட்டான் என்பார்கள். இந்த மரத்தை வெட்டவா? அந்த மரத்தை வெட்டவா? தூரத்தில் இருக்கும் இன்னொரு மரத்தை வெட்டவா? எனும் தட்டழிவு, எதைத் தேர்வது எனும் அலைபாய்வு. அந்தத் தச்சன் போலவே உணர்கிறேன் நான். எந்தச் சொல்லை எடுக்க எந்தச் சொல்லை விடுக்க?" (பக்-268)

ஏனெனில் ஒரு படைப்பிலக்கியவாதியாகக் கம்பனை அணுகும் அவர் கம்பனின் சொல்லாழம் காண்பது எவ்வாறு என்று திகைக்கிறார்.

எடுத்துக் காட்டாக "ஊழி" எனும் சொல்லைக் கம்பன் தனிச் சொல்லாக, சொற்றொடராக 43 இடங்களில் ஆள்கிறான் என்று ஒரு பட்டியல் தருகிறார். (பக்-152)

அவ்வப்போது நாஞ்சில் நாடன் வாய்ப்பு கிடைத்த இடங்களில் எல்லாம் தன் கருத்துகளை ஆங்காங்கே விதைக்கவும் தவறவில்லை.

"ஔவியம்" எனும் சொல்லைக் கம்பன் "அவ்வியம்" என்று எதுகை அமைதியும், ஓசைப் பொருத்தமும், இலக்கண அமைதியும் கருதிப் பயன்படுத்துகிறான்.

வள்ளுவர் "அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும்" என்கிறார்.

கம்பனும் விசுவாமித்திரனைக் காட்ட "அவ்வியம் அவித்த சிந்தை முனிவனை" என்கிறார். ஔவையார் "ஔவியம் பேசேல்" என்கிறார். ஆனால் இச்சொல் "ஔவியம்" என்றோ அல்லது "அவ்வியம்" என்றோ சங்க இலக்கியத்தில் ஓரிடத்தில் கூடப் பயின்று வரவில்லை என்று கூறும் நாஞ்சில் ஔவையும் கம்பனும் வள்ளுவரும் இச்சொல்லைக் காப்பாற்றித் தந்துள்ளனர் என்கிறார். இருந்தாலும் மொழிச் சீர்திருத்தம் எனும் பெயரில் ஔ எனும் எழுத்திற்கு மாற்றாக "அவ்" என்று எழுதுவதை நாஞ்சில் ஏற்கவில்லை. அதனால்தான்.

"ஔடதமும் அவுடதமும் ஒன்றா?, ஔகாரக்குறுக்கம் என்பது அவுகாரக்குறுக்கமா? எழுத்துச் சீர்திருத்தம் என்பது ஒலிக் குறிப்பைச் சீர்திருத்துதல்ல என்பதை நாம் யோசிக்க வேண்டும்"

என்கிறார் அவர்

கம்பன் பயன்படுத்தும் வழக்குச் சொற்களை நூல் மிகச் சிறப்பாகக் காட்டுகிறது. கம்பன் ஐந்து என்பதை வழக்குச் சொல்லாக அஞ்சு என்று கையாள்கிறான். சுந்தர காண்டத்தில் பாடல் 4913-இல் இலங்காதேவியைக் கண்ட அனுமன் "ஐந்து நிறங்களைப் பெற்ற ஆடை உடுத்தவள்" எனும் பொருளில் "அஞ்சு வணத்தின் ஆடை உடுத்தாள்" என்பான்.

"எனவே பேராசிரியப் பெருமக்களே, எந்தச் சொல்லையும் இது மக்கள் வழக்கு, இது வட்டார வழக்கு என்று உதாசீனப் படுத்தி விடாதீர்கள்" என்கிறார் நாஞ்சில் நாடன்.

(மீதி நாளை)

# பேஸ்புக் நீக்கிய உணர்ச்சிப் படம்




நாம் செய்திகளை, தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும்போது, நம் உணர்வுகளைச் சிறிய படங்களாகக் காட்ட எமோட்டிகொன் அல்லது ஸ்மைலி என்ற சிறிய படங்கள் இணையத்தில் நிறைய கிடைக்கின்றன. ஜிமெயில் போன்ற மின் அஞ்சல் தளங்கள், உடனடி செய்தி தரப் பயன்படும் பேஸ்புக் போன்ற தளங்கள், பலவகையான உணர்வுகளுக்கான உணர்ச்சிப் படங்களைக் கொண்டுள்ளன. அண்மையில் "நான் குண்டாக உணர்கிறேன்" ("feeling fat") என்ற படம் பலரின் வெறுப்பிற்கு ஆளாகியது. இது சற்று அதிக எடையுள்ள நபர்களைக் கேலி செய்வதாக பலர் உணர்ந்தனர். ஏதென்ஸ் நகரில் உள்ள ஒஹையோ பல்கலைக் கழகத்தில் படிக்கும் கத்தரின் (24) என்ற மாணவி, ∴பேஸ்புக் தளத்திடம் இந்த உணர்வுப் படத்தை அதன். தளத்திலிருந்து நீக்க ஒரு கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கினார். 16 ஆயிரம் பேருக்கு மேல் இதில் கையெழுத்திட்டனர். இதனை அறிந்த ∴பேஸ்புக் உடனடியாக அதனை நீக்கிவிட்டது.

இதுவரை மொபைல் போன்களில் பயன்படுத்தப்படாத ஒரு ஸ்மார்ட் டயல் வசதி, விண்டோஸ் 10 இல் அறிமுகமாகிறது. இதில் உள்ள "Yellow Books" வசதி மூலம், பயனாளர்கள், மற்றவர்களின் தொடர்பு விபரங்களைத் தேடி அறியலாம்.

பற்றரியின் திறன் செலவாவதைப் பயனாளரே கட்டுப் படுத்தும் வகையில், Battery Saver என்னும் டூல் தரப்பட்டுள்ளது.

பலவகையான யு.எஸ்.பி. வழி இணைப்பு சாதனங்களை இணைத்திட சப்போர்ட் தரப்பட்டுள்ளது. கீ போர்ட், மவுஸ் மற்றும் பெரிய அளவிலான ஸ்டோரேஜ் சாதனங்களை இணைக்கலாம்.

மொபைல் போன் வைத்திருப்பவர் நடக்கிறாரா, ஓடுகிறரா அல்லது நீச்சல் அடிக்கிறாரா என்பதைக் கண்காணிக்க ஒரு டூல் தரப்படுகிறது. இதனை Activity Tracking Tool என அழைக்கலாம். இன்னும் பல வசதிகள்...

நிச்சயமாக, விண்டோஸ் 10 மொபைல் ஒப்பரேட்டிங் சிஸ்டம், மொபைல் பயன்பாட்டில் ஒரு புதிய கட்டமைப்புடன் வர இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

# "செல்லுலர் சிஸ்சர்ஸ்" கொண்டு எச்.ஐ.வி பாதித்த இடத்தை வெட்டி எடுக்கலாம்

எச்.ஐ.வி. குணப்படுத்தக்கூடிய மருந்து ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஒரு படி மேலே சென்றுள்ளனர் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஒரு ஆராய்ச்சியாளர்கள் குழு, கத்திரிக்கோல் போன்ற இயந்திரத்தை பயன்படுத்தி பற்றீரியா மூலம் எச்.ஐ.வி. வைரஸ் கண்டுபிடித்து நீக்கும் ஒரு பாதுகாப்பு முறை அமைப்பை வடிவமைத்துள்ளனர். இந்த சோதனையில் எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட கலங்களை முழுமையாக 72% வரை நீக்கக்கூடிய ஒரு புதிய தொழில்நுட்பத்தை கண்டறிந்துள்ளனர்.

எச்.ஐ.வி. வைரஸ் மனித உயிரணுவிற்குள் ஒளிந்து, கலங்களின் செயல்பாடுகளை முற்றிலும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு வைரசின் மரபணு மூலக்கூறுகள் அதிகப்படுத்தும், பின்பு கலங்களின் சொந்த மரபணுக்குள் புதைந்துகொள்ளும். இவ்வாறு பாதிக்கப்பட்ட கலங்கள் அனைத்தும் எச்.ஐ.வி. தொழிற்சாலை போல் பெருக்கெடுத்து, வைரஸ்களை இன்னும் அதிகப்படுத்தி மனித உடல் முழுவதும் பரப்பிவிடுகிறது.

ஏற்கனவே உள்ள எச்.ஐ.வி. மருந்துகள், தனிப்பட்ட நடவடிக்கைகளை மட்டும் இலக்கு வைத்துள்ளது. உதாரணமாக அவற்றில் சில, கலங்களின் டி.என்.ஏ.க்குள் ஒருங்கிணைப்பதிலிருந்து வைரஸை தடுத்து நிறுத்துகிறது, மற்றொன்று வைரஸை மேலும் அதிகப்படுத்தும் பாதிக்கப்பட்ட கலங்களை தடுத்து நிறுத்துகிறது.

இவ்வாறு வைரஸ் அதிகப்படுத்துவதை தடுத்து நிறுத்துவது சில ஆண்டுகளுக்கு மட்டுமே செயலற்றதாக இருக்கும், பின்னர் மீண்டும் செயற்படுத்த தொடங்கிவிடும். இதனால் நோயாளிகள் வாழும் காலம் வரை, ஒவ்வொரு நாளும் அல்லது ஒவ்வொரு வாரமும் மருந்துகளை தவறாமல் எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதில் பணம், நேரம் மற்றும் முயற்சி ஆகியவை செலவாகிறது.

இந்தப் பிரச்சினையை சரி செய்யும் நோக்கத்துடன், விஞ்ஞானிகள் மூலக்கூறு பாதுகாப்பு அமைப்பை உருவாக்கி பற்றீரியா மூலம் வெளிப்புற டி.என்.ஏ. உள்ள குறிப்பிட்ட பகுதியை வெட்டி எடுக்கும் கருவியை கண்டுபிடித்துள்ளனர். விஞ்ஞானிகள் இதைப் பயன்படுத்தி மரபணுக்களை எடிட் செய்யவும் தொடங்கியுள்ளனர்.

இந்தத் தொழில்நுட்பம், எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட மரபணுக்களின் சரியான இடங்களை வெட்டி, வைரஸை செயலிழக்கச் செய்கிறது.








வலிகாமம் கல்வி வலயத்தில் அழகியல் பாட உதவிக்கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்றுள்ள திருமதி விமலாதேவி நாகேஸ்வரனின் சேவைநயப்பு விழா வலிகாமம் கல்வி வலயக்கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றபோது... (06)





# நிகழ்வுகளின் பதிவுகள்....

கொழும்பு லயன்ஸ் கழகத்தின் நிதியுதவியுடன் காரைநகர் வியாவில் சைவ வித்தியாசாலை மண்டபத்தில் வைத்து அண்மையில் ஊனமுற்றவர்களுக்கு மூன்று சில்லு சைக்கிள் வழங்கப்படுவதையும், பயனாளி ஒருவர் அமர்ந்திருப்பதையும் காணலாம். (50)





ஈழத்துச் சிதம்பரம் தின்னபுரம் சிவன் கோவிலின் தேர்த்திருவிழாவின் போது சுவாமி எழுந்தருளி வருவதையும் தேரில் வலம் வருவதையும் காணலாம். (50)





காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானம் லண்டன் நகரில் உள்ள தொழிலதிபர் நட்டுதட்டுவாணி என்பவரின் உதவியுடன் கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளை நிறுவனத்தினூடாக அண்மையில் ஒருவருக்கு இசைக்கருவி வழங்கப்படுவதையும் வறியகுடும்பத்திலுள்ள ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி வழங்குவதையும் காணலாம். (50)

காரைநகர் கல்வன் தாழ்வு ஸ்ரீமுருகன் முன்பள்ளிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட விசேட நிதியிலிருந்து புதிய சமையல் அறை நிர்மாணிக்கப்பட்டு காரைநகர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் வீ.கண்ணன் தளபாடங்கள் வழங்கி வைக்கும் போது...

# கிளி.மாவட்டத்திலுள்ள உள்ளக வீதிகளை புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் சுமார் மூவாயிரம் கிலோமீற்றர் வரையான உள்ளக வீதிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன. அதனைப்புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றோம். என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை அம்பாள் குளத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அங்குஅவர் மேலும் உரையாற்றுகையில்,

வீதிகளை புனரமைக்க வேண்டிய பொறுப்புடையவர்கள் அதில் அக்கறை காட்டாததன் விளைவாகவே கிராமப்புற மக்கள் இன்றும் போக்குவரத்தில் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் ஆனால் பிரதேச சபைகள் வழமை போல் நிதிவளம் இல்லை என குறிப்பிடுவது பொருத்தமற்றது ஏனெனில் அச்சபைக்கு ஏராளமான வருமான மார்க்கங்கள் உள்ளன. அவை அனைத்தினூடாகவும் அதிக வருமானங்கள் பெறப்படுகின்றன. ஆனாலும் மக்கள் பணியில் அச்சபை அக்கறை செலுத்தாமை வேதனைக்குரியது.

அத்தோடு இன்றைய அரசாங்கம் அபிவிருத்திக்கான எதுவித நிதியையும் ஒதுக்கீடு செய்யவில்லை. இன்று நாட்டின் அரசியல் அடுத்த கட்ட நகர்வு பற்றி எதிர்வு கூறமுடியாத நிலையில் சென்றுகொண்டிருப்பதால் அபிவிருத்தி சார்ந்து எவரும் கவனம் செலுத்தவில்லை. ஆனால மக்கள் இன்று பல தேவைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மக்களின் பல பிரச்சினைகள் இன்னமும் நிவர்த்தி செய்யப்படாதிருக்கின்றன. இந்தத் தருணத்தில் மக்களும் தமது மேம்பாடு குறித்து அதிக கரிசனையுடன் செயற்படுவதனூடாகவே தொடர்ந்து அபிவிருத்தி சார்ந்த ஸ்திர நிலையை பேண முடியும்.

இந்நிலையில் மக்கள் தமக்கான பிரதிநிதிகளை தெரிவுசெயகின்ற வாய்ப்புக்கள் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் மிகவும் நிதானமாக செயற்பட வேண்டும். தேர்தல்காலங்களில் மக்களின் வீடுகளுக்கு வந்து மக்களை உணர்வு ரீதியாக ஏமாற்றி வாக்குப்பெற்றுவிட்டு மக்களுக்கு எந்தவித சேவைகளையும் செய்யாதிருப்பவர்கள் தொடர்பாக இனிவரும் காலங்களில் மக்கள் தெளிவாக செயறபடவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக்கலந்துரையாடலின்போது வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் கிருஸ்ணசாமி மற்றும் அம்பாள் குளம் கிராமத்தின் முன்னோடிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம் அத்தியடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை தங்கரதமும் 13ஆம் திகதி திங்கட்கிழமை காலையில் வேட்டைத்திருவிழாவும், மாலையில் பெரியசப்பறத் திருவிழாவும், மறுநாள் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை புதுவருடதினத்தன்று காலை 9.00 மணிக்கு இரதோற்சவமும் 15 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோறசவமும் இடம் பெறும். (10)

## கும்பாபிஷேகம்

(யாழ். நிருபர்)

அளவெட்டி ஸ்ரீநரசிம்ம வைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 6.00 மணிமுதல் நடைபெறவுள்ளது.

காலை 6.0-0 மணிக்கு விநாயகர் வழிபாடு புண்ணியாகவாசம் இடம் பெற்று 9.15 மணிக்கு தூபிகள் அபிஷேகமும் 10.20 இற்கு கும்பாபிஷேகமும் இடம் பெறும்.

மகாகும்பாபிஷேகத்திலும் அதனைத்தொடர்ந்து இடம் பெறும் அன்னதான நிகழ்விலும் அடியார்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலனசபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (10)

## மன்னாரில் அதிக வெப்பம்

(மன்னார் நிருபர்)

சம்ப நாட்களாக மன்னாரில் கடும் வெப்பம் நிலவுகின்றது. இதனால் பொது மக்களும் வயோதிபர்களும் வெளியில் நடமாட அஞ்சுகின்றனர். சென்ற ஆண்டு இறுதி மூன்று மாதம் பெய்த கடும் மழையின் பின்னர் தற்போது கடும் வெய்யில் நிலவுவதால் கால் நடைகளும் நீர் நிலைகளை தேடி அலைந்து திரிகின்றன.

மன்னாரில் செப்ரெம்பர் முதல் டிசம்பர் வரையான காலமே மழை வீழ்ச்சிக்கான காலமாகும். இக்காலங்களில் வடகீழ் பருவ வெப்பக் காற்று வீசி நல்ல மழை பெய்யும் காலமாகும். ஆயினும் இம்முறை நகரம் உட்பட அனைத்திடங்களிலும் பெருவெள்ளம் ஏற்பட்டு, மக்கள் பெருமளவில் இடம் பெயர்ந்தனர். வேளாண்மை முற்றாக அழிவடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## விடைத்தாள் மதிப்பீடு விண்ணப்பிக்க வாய்ப்பு

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த.உயர் தரப்பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பிடும் பணிக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து பரீட்சைத்திணைக்களம் விண்ணப்பங்களைக்கோரியுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பரீட்சைகள் திணைக்களம் பாடசாலை அதிபர்களிற்கும், கடந்த காலத்தில் பரீட்சை மதிப்பீட்டுப பணியில் ஈடுபட்டு வந்தவர்களிற்குத் தனிப்பட்ட ரீதியிலும் அனுப்பி வைத்துள்ளது. உதவிப்பரீட்சகர்கள், மேலதிக பிரதம பரீட்சகர்கள், எண்கணிதப் பரிசோதகர்கள் ஆகியோருக்கான விண்ணப்பங்கள் கோரபபட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைத் திணைக்களத்தலைவரூடாக எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத்திணைக்களத்தின் பாடசாலைப்பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளைக்கு அனுப்பிவைக்கும்படி பரீட்சைகள் ஆணையாளர் கேட்டுள்ளார்.

விண்ணப்பப் படிவத்தின் இடது பக்க மேல் மூலையில் A/L 2015 தரவு மீளாய்வு எனக் குறிப்பிடப்படவேண்டும் எனவும் அறிக்கப்பட்டுள்ளது. (06)




### வடக்கு மாகாணசபை தொழில்நுட்ப உதவியாளர் தரம் III ஆட்சேர்ப்பு திறந்த போட்டிப் பரீட்சை (விவசாய விரிவாக்கம்)

வடமாகாண பொதுச்சேவையின் தொழில்நுட்ப உதவியாளர் தரம்III (விவசாய விரிவாக்கம்) பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தலுடன். தமிழ். கணிதம் மற்றும் ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக நான்கு திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது பொது நிர்வாக அமைச்சின் 01/2012 சுற்று நிருபத்திற்கு அமைய இப்பதவிக்குப் பொருத்தமான தேசிய தொழில் தகைமை மட்டம் 5 தொழில்நுட்பச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் செயலாளர். மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு. வடக்கு மாகாணம். இல.393/48. கோவில் வீதி. யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் 'வடக்கு மாகாண பொதுச்சேவையின் தொழில்நுட்ப உதவியாளர் III (விவசாய விரிவாக்கம்) பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2015' எனக்குறிப்பிடுதல் வேண்டும். இதன் முழு விபரங்களையும் கடந்த 1ஆம் திகதி வெளியாகிய யாழ்.தினக்குரல் பத்திரிகையில் பார்வையிட முடியும்.

வயது : 18 - 35 வரை இருத்தல் வேண்டும

### தேசிய கல்வி நிறுவகம் முகாமைத்துவ உதவியாளர் ஆட்சேர்ப்பு

தேசிய கல்வி நிறுவகத்தின் முகாமைத்துவ உதவியாளர்கள் பதவி நிலைகளுக்கு விண்ணப்பங்கள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் ஒரே அமர்வில் தமிழ். கணிதம். ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் விசேட சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும். வயது : 18 - 45 வரை இருத்தல் வேண்டும்

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் பணிப்பாளர்-நாயகம். தேசிய கல்வி நிறுவகம். த.பெ.இல.21 ஹைலெவல் வீதி. மஹரகம என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடிதவுறையின் மேல் மூலையில் 'முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு' எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

### புகையிரத நிலைய அதிபர்கள் (The Post of Station Master)

இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர் தரத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் ஒரே அமர்வில் தமிழ். கணிதம் மற்றும் வேறு பாடங்கள் இரண்டில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன்

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும்படியாக 'பரீட்சை ஆணையாளர். இலங்கை பரீட்சைத் திணைக்களம். திட்டமிடல் மற்றும் வெளிநாட்டு பரீட்சைக்கிளை. த.பெ.இலக்கம் 1503. கொழும்பு'. என்ற முகரிவக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத நிலைய அதிபர்III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2015) ' எனக்குறிப்பிடுத்ல் வேண்டும்.

வயது : 18 - 45 வரை இருத்தல் வேண்டும்.

### மாணவ தாதியர்கள் ஆட்சேர்ப்பு (ஆண் /பெண்) (The Post of Nursing)

சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் மாணவ தாதியர் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. உயர்தர விஞ்ஞானப் பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இப் பயிற்நெறி மூன்று வருடங்களைக் கொண்டதாகும். இக்காலத்தின் போது 13.160 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சியைத் திருப்திகரமாகப் பூரணப்படுத்திய பின்னர் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை 'பணிப்பாளர் (நிர்வாகம்) 01. சுகாதார அமைச்சு. சுவசிரிபாய. இல.385. வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை. கொழும்பு - 10'. என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'மாணவ தாதியர் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2015 எனக்குறிப்பிடப்படுவதுடன். வசிக்கும் மாவட்டத்தினையும் குறிப்பிடுதல் வேண்டும்.

தொகுப்பு :- சி.என்.எச். சாளிஸ்

# பிரதமரின் கைகளில் அதிகாரம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முற்றாக நீக்கி அதிகாரங்களை பிரதமரின் கைகளில் ஒப்படைக்க நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம், மக்களின் ஆதரவில்லாது பிரதமராகியுள்ளதை ரணில் விக்கிரமசிங்க மறந்துவிட வேண்டாம் என அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார் .

அடுத்த அரசாங்கத்தில் ரணில் பிரதமராவது கடினமான விடயமேயாகும். அதற்காகவே தொடர்ந்தும் தேசிய அரசாங்கத்தை வலுப்படுத்த நினைக்கிறார்.

ஜனாதிபதி முறைமையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டியது அவசியமானது, சர்வாதிகாரப் போக்கில் பயணிக்கும் ஜனாதிபதி முறைமையை ஜனநாயக பாதையில் கொண்டுசெல்லவே நாம் தேசிய அரசாங்கம் எனும் கூட்டணிக்கு ஆதரவு வழங்கினோம், இதில் 19 ஆவது திருத்தத்தினைக் கொண்டுவந்து அதனூடாக ஜனாதிபதி முறைமையினை மாற்றியமைக்க வேண்டும் என்ற இணக்கப்பாடு எட்டப்பட்டது.

ஆனால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதியின் அதிகாரங்களை முழுமையாக நீக்கி அதை பிரதமர் கைகளில் ஒப்படைக்க யாரும் இணங்கவும் இல்லை. தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடவும் இல்லை, ஆனால் இப்போது 19 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமான வகையில் ஜனாதிபதி முறை மையினை மாற்றிக்கொள்ள முயற்சிக்கின்றனர். நாம் எந்த சந்தர்ப்பத்திலும் நிறைவேற்று ஜனாதிபதி முறையினை நீக்கி அதை பிரதமர் கைகளில் கொடுக்க அனுமதிக்க மாட்டோம்.

இப்போது கொண்டுவரப்பட்டுள்ள 19 ஆவது திருத்த சட்ட மூலத்தில் தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்துவது , சுயாதீன ஆணைக்குழுவின் செயற்பாடுகளை பலப்படுத்துவதென பல விடயங்கள் உள்ளன. ஆனால் அவை அனைத்தையும் தவிர்த்து ஜனாதிபதி முறைமையில் மாற்றத்தினை கொண்டுவர நினைப்பதால் மட்டும் நாட்டில் மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சி மிகப் பெரிய சதி வலையினை பின்னுகின்றது. இதில் மைத்திரிபால சிறிசேனவை தள்ளி அதிகாரங்களை தம் வசப்படுத்தும் நோக்கத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் அமைந்துள்ளன எனவே அதை முறியடிக்க வேண்டும்.

இன்று தேசிய அரசாங்கம் என்று சொல்லிக்கொள்வதால் மட்டுமே பிரதமர் என்ற அந்தஸ்து ரணில் விக்கிரமசிங்கவிற்கு கிடைத்துள்ளது. அந்த அந்தஸ்தை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ளவே அடுத்த முறையும் தேசிய அரசாங்கத்தை அமைக்கும் வகையில் இவரின் கருத்துக்கள் அமைகின்றதெனவும் அவர் குறிப்பிட்டார்.

## ஊழலற்ற புதியநாடு இது ரவியின் கனவு

ஊழலற்ற புதிய நாடொன்றை உருவாக்கவேண்டும் என நிதி அமைச்சர ரவி கருணாநாயக்கா தெரி வித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் புதிய அரசாங்கத்திற்கு நிதி தேவையான அளவு கிடைப்பதாகக் குறிப்பிட்ட நிதி அமைச்சர். அந்த நிதியை ஊழல் இல்லாத அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.வீதி ஒன்றை அமைப்பதற்கு 10 இலட்சம் ரூபா செலவாகும் என்றால் அதற்கு 100 இலட்சம் செலவிடுவது அபிவிருத்தியல்ல எனவும் ஊழலைக் குறைப்பதல்ல. அதனை முழுமையாக இல்லாதொழித்து புதிய நாடொன்றை உருவாக்குவதே தமது நோக்கம் எனவும் குறிப்பிட்டார்.

## புலிகளின் சொத்துக்களை பெறமுயலும் அரசு

முக்கிய ஐந்து நாடுகளில் புலிகள் அமைப்புக்குக் காணப்படும் ஐந்து பில்லியன் டொலர் சொத்துக்களை இலங்கைக்குப் பெற்றுக் கொள்வது தொடர்பில் அந்நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கனடா, சுவிட்சர்லாந்து, நோர்வே, பிரானஸ் மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளில் புலிகள் அமைப்புக்கு இந்த சொத்துக்கள் காணப்படுவதாக பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று அறிவித்துள்ளது.

## பரமர் சங்கமம்



பேஸ்புக்கெனும் முகப்புத்தகம் ஒரு தகவலைச் சமீபத்தில் போட்டது. என்னெண்டால் மனிதனால் உருவாக்கப்பட்ட இரண்டு விடயங்களை அழிக்க முழயாமல் இருக் கெண்டு! ஒண்டு சாதியெண்டும், மற்றது பிளாஷ்ழிக் கெண்டும் போடப்பட்ழருந்துது. •

பிளாஷ்ழிக்கை அழிக்க வேண்டிய தேவை வந்தாத்தானை அழிக்கலாம். அதாலை மனிதனுக்கு எவ்வளவு பயன்பாடுண்டு. அதாலை கெடுதி சூழ்ந்தால் அழிச்சுப் போடலாம். உந்தச் சாதி இருக்கே அதை அழிக்கிறே பெரும்பாடாத் தான் இருக்கும் போலை கிடக்கு.

சாதியெண்டால் சாதிக்கத்தானேயெண்டும் சொல்லுவினம். பேரிலேயே அதின்ரை குணம் குறிசொல்லப்பட்டெல்லே இருக்கு. ஒண்டு ரெண்டா முப்பது வருசங்க ளெல்லே போட்ழச்சாங்கள் சாதிவெழுத்தோ போச்சு இல்லையே!

அந்தக் காலங்களிலேம் இல்லாத அளவுக்க அதிலை வெறிகொண்ட சமாச்சாரம் சமீபத்தில் நடந்திருக்கு. மானிப்பாய் மருதழப்புள்ளையார் கோவில் கடந்த ஒன்பது பத்து வருசங்களால இவ்வாண்டுதான் கொழயேறித் திருவிழாக்கள் நடக்குது.

பன்னெடுங்காலமாகக் கொழயேற்றத் திருவிழாவை ஒரு பகுதி செய்து வந்தது. ஒன்பது பத்து வருசமாத் திருத்த வேலையள்லை நடக்காமை இருந்து திருவிழாக்கள் நடக்கத் துவங்கப் போகுதென்ன அந்தப் பகுதியிடம் இருந்து கொழயேற்றத் திருவிழாவைப் பறிக்க இன்னொரு பகுதி சூழ்ச்சி செய்ததாம்.

கொழயேற்றும் மரத்தை இரவோடை இரவா நிலத்தைத் தோண்ழப் புதைச்சு வைச்சுதாம் இதை அறிஞ்சவை கொழமரத்தை தோண்ழயெடுத்து செய்ய வேண்ழய கிறுத்தியங்களைப் பாத்துக் கொழயேத்திச்சுதெண்டு கேள்வி.

முப்பது வருசமென்ன நூறு வருசம் போட்டு வெளுவெளெண்டு வெழுத்தாலும் தமிழனிட்டைப் புழச்ச ஊத்தை போகவே போகாது போலையெல்லே கிடக்கு. எறிகணை விமானக்குணடு பத்தாதெண்டு கொத்துக் குண்டும் போட்டழச சாங்கள் போச்சே சாதி.

அந்தக் காலத்திலை கொழயேற்றத் திருவிழாவைச் செய்து வந்த பரம்பரைக்குத் திருவிழா உரிமையைக் கொடுக்க மறுக்க எடுத்த தந்திரோபாயம் இங்கிலீசுக் காறன் ஒண்டாக்கிப் பிணை படுங்கோண்டு செய்து போட்டுப் போன இந்த விண்ணானச் சீமையிலே வெளுக்கவே செய்யும்?

எப்புழயோ குளறுபழயள் கோவில் நிர்வாகத்திலை தலைதூக்கியிட்டார். திருவிழாவை சித்திரை வருசத்துக கு தேர்த்திருவிழா வீதியெங்கும் ஆரோகணிக்கப் போதெல்லே!

தேர்த்திருவிழாவின் தத்துவமென்னெண்டு சொல்லுது? மும்மலங்களான ஆணவம், மாயை கம்பம் போன்ற துர்குணங்களை மனிதரிடம் இருந்து துவம்சம் செய்யும் இறைபணியெண்டுதானை.

தேவை இல்லாததை மனித சமுதாயத்திலை இருந்து அழித்து நல்ல குணங்களை இனியாவது இந்தத் தமிழ் மாந்தரிடை மருதழயான் தேரோழத் தோன்ற வேண்டும். இல்லையே பின்னை... என்ன நான் சொல்லுறே...

## மகிந்தவிற்கு அஞ்சும் அமைச்சர் ராஜித

### கூறுகிறார் விதுர எம்.பி.

(கொழும்பு)

அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ராஜித்த சேனாரத்னவிற்கு மகிந்த அச்சம் ஏற்பட்டுள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அமைச்சரவை பேச்சாளர். பொய்யான கருத்துக்களை வெளியிட்டு மக்களை ஏமாற்றுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தேவைக்கு ஏற்ப செயற்படுபவர் மகிந்த ராஜபக்ஷ அல்ல. ராஜித சேனாரத்ன உட்பட்ட ஒரு குழுவினரே எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சீனா மற்றும் இலங்கைக்கு இடையேயான உறவில் பாதிப்பை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அமைச்சரவை பேச்சாளர் மேற்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 8,660 கிலோ நெல் வடக்கில் கொள்வனவு

இம்முறை பெரும்போக நெல் உற்பத்தியில் 8,660 கிலோ கிராமிற்கும் அதிகமான நெல்லை வடக்கு விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக என் நெல் சந்தைப்படுத்தல்சபை தெரிவித்துள்ளது.

இந்நெல் கொள்வனவுக்காக அரசாங்கம் சுமார் 400 மில்லியன் ரூபாவை செலவளித்துள்ளதாகவும் நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

அரசு மேற்கொண்டுள்ள இப்புதிய முயற்சியை விவசாயிகள் பாராட்டியுள்ளனர்.

## நாடாளுமன்றக் கலைப்பிற்கு அரசியலமைப்புத் திருத்தம்

### கோரிக்கை விடுக்கும் நிமால்



(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னதாக அரசியல் அமைப்பு திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். தேர்தல் முறைமையிலும் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.

இதற்கான பூரண ஒத்துழைப்பை அரசாங்கத்திற்கு வழங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயார்.

ஜனாதிபதியினால்' மட்டுமே நாடாளுமன்றை கலைக்க முடியும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஏனைய அரசியல் கட்சிகள் மற்றும் தரப்பினர் நாடாளுமன்றம் கலைப்பது குறித்து வெளியிடும் கருத்துக்கள் குறித்து பொருட்படுத்த வேண்டியதில்லை.

தேர்தல் முறைமையில் மாற்றமின்றி அரசியல் அமைப்பு மாற்றங்கள் செய்வதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்றுக் கொள்ளாது என எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகை ஒன்று எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## சுதந்திரக்கட்சியுடன் இணைந்து இடதுசாரிக் கட்சிகள் போட்டி

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து போட்டியிட இடதுசாரிக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ஏற்கனவே கடந்த பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலின்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகள் இரத்தாகியுள்ள நிலையிலேயே இந்த உடன்பாடு குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையுடன் பேசவுள்ளதாக லங்கா சம சமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ் விதாரண தெரிவித்துள்ளார்.

இடதுசாரி கட்சிகளை பொறுத்தவரை எதிர்காலத்தில் தேசியக்கூட்டமைப்பு ஒன்றுடன் , இணைந்து போட்டியிடுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் என்ன நடக்கப்போகிறது என்பது கடவுளுக்கே தெரியும் என்று விதாரண குறிப்பிட்டுள்ளார். இதேவேளை இடதுசாரிக் கட்சித் தலைவர்களான டியு குணசேகர, திஸ்ஸ விதாரணவை தவிர வாசுதேவ நாணயக்கார, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது

(08).தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் கூட்டினுள் எழுதுக.

60.மணல்மண்ணின் வளியூட்டம் அதிகளவு காணப்படும்
61.களிமண்ணில் வளியூட்டம் குறைவாகக் காணப்படும்
62.இருவாட்டி மண்ணில் களித்தன்மை காணப்படுவதில்லை
63.காடு அழிப்பு மழை வீழ்ச்சியைப் பாதிக்கும்
64.கடும்மழை ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தப்படமாட்டாது

(09).பொருத்தமான சொற்களை இணைக்குக

| | | |
|---|---|---|
| 65. | பயிர்ச்செய்கைக்கு உகந்த மண் | ஒட்டும் தன்மையை உடையது |
| 66. | களிமண் | மண்சரிவை ஏற்படுத்தும் |
| 67. | புவி நடுக்கம் | இருவாட்டி மண் |
| 68. | செண்பகம் கத்துதல் | நுண்ணங்கி |
| 69. | பற்றீரியா | மழைக்கான அறிகுறி |

(10).வினாக்களுக்கு விடை தருக

70.மணல்மண்ணின் இயல்புகள் மூன்று தருக?

.................................................................

71.களிமண்ணின் இயல்புகள் மூன்று தருக?

.................................................................

72.இருவாட்டி மண்ணின் இயல்புகள் மூன்று தருக?

.................................................................

73.மழை பெய்வதற்கு முன்பு பிராணிகள் காட்டும் அறிகுறிகள் மூன்று தருக?

.................................................................

74.புவியின் பல்வேறு தன்மைகளினால் சூழலில் ஏற்படும் தாக்கங்கள் மூன்று தருக?

.................................................................

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01).1. 3 2. 2 3. 2 (02).4. 2 5. 2 (03). 6. 3 7. 2 (04).8. தொடர்வண்டி
9.விமானம் 10.முச்சக்கரவண்டி 11.குதிரைவண்டி 12.மோட்டார்கார் (05).13.2
14.3 15.63%TFM 16.soap 17.இலவசம் 18.சன்லைட், டிடர்ஜன் 35g பவுடர்
(06).19.2 20.3 21.3 22.1 23.2 (07).24.தருமர்
25.பற்று (08).26.3 27.3 28.3 (09).29.1 30.2 31.1
(10).32.நூலகம் 33.வெலிநாடு 34.சொள் 35.பூன்தோட்டம் 36.குளந்தை
(11).37.உமி 38.மீனவர் 39.ஒட்டகம் 40.மீகாமன் 41.இடையன்
(12).42.2 43.1 44.1 45.3 46.1
(13).47.செருப்பு 48.தோடு 49.சட்டை

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



தரம் - 3 பரீட்சை முன்னோடி- 2015 (சுற்றாடல்)

பகுதி - I
1 மணி 15 நிமி



# கல்வி முரசு

(01).சரியான விடையின் கீழ் கோடிடுக.

01.பின்வருவோரில் எவருக்கு முதலில் உதவுதல் வேண்டும்?
(1).ஆசிரியருக்கு
(2).நண்பனுக்கு
(3).விபத்துக்குள்ளானவருக்கு
(4).ஏழைகளுக்கு




02.வகுப்பறையில் தினமும் செய்யக்கூடியவைகளில் ஒன்றாகக் கருத முடியாதது எது?
(1).தூசு தட்டிக்கூட்டுதல்
(2).தினமும் நீருற்றிக் கழுவுதல்
(3).வெண்கட்டியைக் கொண்டு வருதல்
(4).தளபாடங்களை ஒழுங்காக அடுக்குதல்

03.குழு விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஏற்படக்கூடியவையாகக் கருதக்கூடியது எது / எவை சரியானவை?
(1).ஒற்றுமை ஏற்படும் (2).பொறுப்புடன் செயற்படல்
(3).புரிந்துணர்வு ஏற்படும் (4).மேற்கூறிய மூன்றும் சரியானவை

04.உமது நண்பர்களிடமிருந்து பெறக்கூடியவைகளில் ஒன்று எது?
(1).பொய் (2).களவு (3).சண்டை (4).ஒற்றுமை

05.மாணவர்களுக்கு மிக முக்கியமானது எது?
(1).கல்வி (2).விளையாட்டு (3).சுற்றுலா (4).அதிககட்டுப்பாடு

06.விளையாட்டுக்களில் பயன்படுத்தப்படும் பொருட்களில் ஒன்றாகக் கருத முடியாத பொருள் எது?

(1)  (2)  (3)  (4) 

07.ஏனையோர் விரும்பாமல் இருக்கக்கூடியது எது / எவை?
(1).தலை வாராமல் (2).சத்தமாகப் பேசுதல்
(3).அசுத்தமாக இருத்தல் (4).மேற்கூறிய மூன்றும் சரியானவை

08.பின்வரும் நிலைகளில் எந்நிலையில் இருப்பது சிறந்ததல்ல?
(1).மகிழ்ச்சி (2).புன்னகை (3).கோபம் (4).அமைதி

09.பின்வருவனவற்றுள் எது ஒரு விளையாட்டாகக் கருத முடியாது?
(1).தேசியக்கொடி ஏற்றுதல் (2).கட்டம் பாய்தல்
(3).அம்புலி பாய்தல் (4).கொத்திருக்கா கொத்து

(02).தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( ✕ ) எனவும் கூட்டினுள் இடுக.

10.சத்தமாகப் பேசுவதைத் தவிர்த்தல் வேண்டும்
11.குழு விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஒற்றுமை ஏற்படமாட்டாது
12.நண்பனுக்குத் துன்பமான நிலைமை அல்லது கஷ்டங்கள் ஏற்படும் போது உதவுதல் வேண்டும்.
13.திறமையை வெளிக்காட்டும் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்குவிப்பது சிறந்ததல்ல
14.மண்சரிவு ஏற்படுவதனால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதில்லை

**(03). பொருத்தமான சொற்களை இணைக்குக**

| | | |
|---|---|---|
| 15. | விபத்துக்குள்ளாவது | விருப்பத்திற்குரியது |
| 16. | நண்பனுக்கு உதவி செய்தல் | வதைகொடுத்தல் கூடாது |
| 17. | மிருகங்களுக்கு | சுகம் தரும் |
| 18. | குழுக்களாகச் செயற்படும் போது | விருப்பத்துக்குரியதல்ல |
| 19. | சுத்தம் | ஒற்றுமையாகச் செயற்படுதல் |

**(04). பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

| | | | | |
|---|---|---|---|---|
| ஒற்றுமையாகச் | சுத்தம் | சமுதாயச் | சீரான | ஈடுபடத் |

20. நாங்கள் தினமும் வகுப்பறையைச் .................................................. செய்தல் வேண்டும்
21. குழு விளையாட்டுக்களில் ஈடுபடும் போது .................................................. செயற்படுகின்றனர்.
22. பொறாமை ஏற்படுவது.................................................. சந்தர்ப்பங்களினாலாகும்
23. மாணவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக்குவதற்கு .................................................. ஒரு ஒழுக்க முறையை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.
24. மோதல்கள் மூலம் குழுவினர் அவர்களின் உச்சக்கட்ட முயற்சியில் .................................................. தூண்டப்படுவார்கள்

**(05). சரியான விடையின் கீழ் கோடிடுக.**

25. விளையாட்டு மைதானம் ஒன்று அமைப்பதற்கு ஏற்ற நிலம் எவ்வாறு இருத்தல் வேண்டும்?
(1). மேட்டுநிலமாக (2). பள்ளமான நிலமாக
(3). சமதரையான நிலமாக (4). வரம்புசால் நிலமாக

26. மேட்டுநிலத்திற்கு பந்து ஒன்றை உருட்டிய போது?
(1). பந்து மீண்டும் கீழ்நோக்கி வந்தது (2). வேகமாக ஓடியது
(3). அப்படியே நின்றது (4). மெதுவாக அசைந்து சென்றது

27. பயிர்ச்செய்கைக்கு உகந்த மண் எது?
(1). மணல்மண் (2). களிமண் (3). நன்மண் (4). கடல்மண்

28. மண்ணில் வாழும் ஒரு பேரங்கி எது?
(1). பக்றீரியாக்கள் (2). பங்கசுக்கள் (3). மண்புழு (4). மீன்

29. மண்ணிலே வாழும் ஒரு நுண்ணங்கி எது?
(1). பக்றீரியாக்கள் (2). நண்டு (3). மண்புழு (4). அட்டை

30. வண்டல் மண் என்ன நிறத்தைக் கொண்டது?
(1). கறுப்பு (2). சிவப்பு (3). வெள்ளை (4). மஞ்சள்

31. மணல் மண்ணில் சிறப்பாக வளரக்கூடிய ஒரு தாவரம் எது?
(1). நெல் (2). தென்னை (3). தாமரை (4). மரவள்ளி

32. களி மண்ணில் சிறப்பாக வளரக்கூடிய ஒரு தாவரம் எது?
(1). தென்னை (2). பனை (3). மாதுளை (4). நெல்

33. மழைபெய்வதனால் கிடைக்கும் ஒரு நன்மை அல்லாதது எது?
(1). மண்ணரிப்பு (2). குளிர்ச்சியான சூழல்
(3). விலங்குகள் குடிப்பதற்கு (4). விவசாயத்திற்கு

34. பொருட்கள் எரிவதற்கு அவசியமானது எது?
(1). நீர் (2). வளி (3). வீடு (4). கல்

35. காற்றின்வேகம் மிகவேகமாக இருந்தால் அதை எவ்வாறு அழைப்பர்?
(1). புயல்காற்று (2). தென்றல்க்காற்று (3). ஈரக்காற்று (04). வறண்டகாற்று



36. பின்வரும் எவ்விலையைப் பயன்படுத்தி ஒலியைப் பிறப்பிக்கும் ஊதியைச் செய்ய முடியாது?
(1). தென்னோலை (2). பலாஇலை (3). பூவரசஇலை (4). முருங்கைஇலை

37. சைக்கிள் டயருக்கு எவ்வாறு காற்று அடிக்கப்படுகின்றது?
(1). மின்விசிறி மூலம் (2). காற்றடிக்கும் பம்பி மூலம்
(3). காற்றாலை மூலம் (4). துருத்தி மூலம்

38. கம்மாலைப்பட்டறை ஒன்றில் காற்றை ஊதுவதற்குப் பயன்படுத்தும் கருவியை எவ்வாறு அழைப்பர்?
(1). மின்விசிறி (2). துருத்தி (3). காற்றாலை (4). ஊதுகுழல்

39. காற்றில் இயக்கக்கூடிய காகிதத்தில் செய்யக்கூடிய ஒரு பொருள் எது?
(1). காகிதக்கப்பல் (2). காகிதக்காற்றாடி (3). காகிதப்பெட்டி (4). காகிதப்பந்து


40. வளியை அடைக்கக்கூடிய ஒரு பொருள் எது?
(1). காகிதப்பை (2). பலூன் (3). சாக்கு (4). துணிப்பை

41. காற்றினால் கிடைக்கும் ஒரு நன்மை எது?
(1). ஈரத்துணியை உலரச்செய்தல் (2). மரங்கள் முறிதல்
(3). மின்கம்பம் சரிதல் (4). கூரையை உடைத்தல்


42. காற்றினால் கிடைக்கும் ஒரு தீமை?
(1). காற்றாலை இயங்குதல் (2). பொருட்கள் எரிதல்
(3). அங்கிகள் சுவாசித்தல் (4). மரங்கள் முறிதல்


43. மனிதன் சுவாசிக்கப் பயன்படுத்தும் வாயு எது?
(1). ஒட்சிசன் (2). காபனீரொட்சைட்டு (3). நைதரசன் (4). அமோனியா

**(06). பின்வரும் படங்களுக்குப் பொருத்தமான பெயர்களை எழுதுக.**


44. 
..............................

45. 
..............................

46. 
..............................

47. 
..............................


48. 
..............................


49. 
..............................


50. 
..............................

51. 
..............................


**(07). பின்வரும் படங்களின் பெயர்களைத் தருக**

52. 
..............................


53. 
..............................


54. 
..............................

55. 
..............................

56. 
..............................

57. 
..............................

58. 
..............................

59. 
..............................

# யுத்தகால மாற்றுவலுவுள்ளோருக்கு நிலையான உதவிகள் கிடைக்கவில்லை

## பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கவலை



யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்கள் கடந்த நிலையிலும் யுத்தத்தினால் மிக, மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய வாழ்வாதார உதவிகளும், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உதவிகளும் கிடைக்கவில்லை என பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலைமை பின்தங்கிய பிரதேசமாகத் திகழும் யுத்த மோதல்கள் இடம்பெற்ற வன்னிப் பிரதேசத்திலேயே அதிகமாகக் காணபடுகின்றது. குறிப்பிட்ட அரச உதவிகள் கிடைத்துள்ள போதிலும் மாற்று வலுவுள்ளவர்கள் என அழைக்கப்படுகின்ற அங்கங்களை இழந்தவர்கள், பார்வையிழந்தவர்கள், ஆண் துணையற்ற நிலையில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டுள்ள குடும்பங்கள் என்பவற்றிற்கு, அந்தக் குடும்பங்களின் தன்மைகளுக்கு ஏற்ப, நிலைத்து நிற்கக் கூடிய உதவிகள் கிடைக்கவில்லை என்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

தொண்டு நிறுவனங்களும் தனியார் பலரும் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவர்களின் வல்லமைக்கேற்ற வகையில் வழங்கி வருகின்ற உதவிகளை அவர்கள் நன்றியோடு ஏற்றுக்கொண்டுள்ள போதிலும், அரசாங்கம் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க வகையில் திட்டங்களை வகுத்து செயற்பட வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

அவயவங்களை இழந்தவர்கள் குறிப்பாக கால்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்களைத் தயாரித்து வழங்குவதில் பல நிறுவணங்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றன.

இவற்றின் உதவிகளினால், பாதிக்கப்பட்டவர்கள், செயற்கை அவயவங்களைப் பெற்றுக் கொள்ளவும், அவற்றை, காலத்துக்குக் காலம் திருத்திக்கொள்ளவும் வாய்ப்பு எற்பட்டிருக்கிறது.

# 64 இலங்கையர்களுக்கு சீசெல்ஸில் வங்கிக் கிளை

## விசாரணைகள் ஆரம்பம்

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரின் உறவினர்கள் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக நிதியமைச்சு விரைவில் அதிகாரிகள் குழு ஒன்றை, சீசெல்ஸ் நாட்டுக்கு அனுப்பவுள்ளதாக நிதயமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தக் குழு, சீசெல்ஸ் அதிகாரிகளுடன் இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக முதலீடு செய்யப்பட்டுள்ள நிதிகள் குறித்து ஆராயவுள்ளனர்.

இந்தநிலையில் சுமார் 64 இலங்கையர்கள் மாத்திரமே உள்ள சீசெல்ஸில் 2011 ஆம் ஆண்டு இலங்கை வங்கியின் கிளையை திறந்தமைக்கான காரணம் குறித்து மத்திய வங்கியும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதியின்றியே சீசெல்ஸ் வங்கிக் கிளை திறக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

### மிதிவெடி வெடித்ததில் 3 இராணுவத்தினர் காயம்

மடு, பண்டிவிரிச்சான் பகுதியில் அகற்றப்பட்ட மிதிவெடிகளை செயலிழக்கச் செய்யும் போது அவற்றிலொன்று தவறுதலாக வெடித்ததில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மடு, பண்டிவிரிச்சான் பகுதியில் உள்ள கண்ணிவெடிகள் தனியார் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் அகற்றப்பட்டு வருகின்றன.

இவ்வாறு அகற்றப்பட்ட கண்ணி வெடிகளை இராணுவத்தினர் செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது மிதிவெடியொன்று தவறுதலாக வெடித்துள்ளது. இதில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்தனர்.

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் பாரிய முறைகேடுகள் கண்டுபிடிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் பாரிய முறைகேடுகள் இடம் பெறறதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் ஆராய்ந்த சட்டத்தரணி ஜே.சி.வெலியமுன தலைமையிலான விசாரணைக் குழு, இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

குறிப்பாக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனருமான நிசாந்த விக்ரமசிங்க, தமது பதவியை முறைகேடாக பயன்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.


அத்துடன், விமான சேவையின் பாதுகாப்பு விதிமுறைகள் மீறப்பட்டதால் பல மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நுழைவுத் தேர்வில் சித்திபெறாத மற்றும் தகைமையற்றவர்களை பணிக்கமர்த்தியமை, ஒப்பந்தங்கள் முறைகேடாக பயன்படுத்தப்பட்டமை, விமானப் பணியாளர்கள் சட்டவிரோத ஆட்கடத்த லுக்கு துணை நின்றமை உள்ளிட்ட பலவாறான குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள் ளன.

அத்துதவிர ஏராளமான அநாவசிய செலவுகள் செய்யப்பட்டமையும் கண்டறியப்பட்டுள்ளது.



இந்நிலையில், குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டுமென, சட்டத்தரணி வெலியமுன தலைமையிலான விச்ாரணைக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.



# இன்று பங்குனித் திங்கள்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற ஆதிபராசக்தியானவள் அடியார்களின் குறை தீர்த்து நிறைவாழ்வை அருளும் பொருட்டு அம்பிகையாக வீற்றிருந்து அருள்பாலிக்கும் தலம்தான் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலாகும்.

இன்றைய பங்குனித் திங்கள் நன்னாளிலே உலகுக்கெலாம் தாயாக விளங்கும் லோகமாதாவாகிய அன்னையை வழிபட்டு நிற்கும் அடியார்களுக்கு அருள் புரியும் அற்புதம் சொல்லில் அடங்காது. அம்பிகையின் பொற்கமல பாதம் பணிந்து புதுப்பானையிலே புத்தரிசிப் பொங்கல் பொங்கிப் புடைத்து வழிபாடியற்றி மகிழும் அடியார்களின் பக்திபூர்வமான நிகழ்வை இன்று மட்டுவிலிலே காணலாம்.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் இன்று விழாக்கோலம் பூண்டு, திரும்பிய பக்கமெல்லாம் அடியார்களின் கூட்டமாகவே இருக்கும். உறவுகளெல்லாம் ஒன்றுகூடி ஒற்றுமையாக வந்து, பன்றித்தலைச்சி அம்பாளுக்குப் பொங்க விட்டு மகிழும் பக்திபூர்வமான பாங்கு உள்ளத்திலே உவகையை உண்டாக்கும்.

பங்குனி மாதம் பிறந்து விட்டாலே மட்டுவில் பிரதேசம் களை கட்டத் தொடங்கி விடும். தென்மராட்சி சாவகச்சேரிக்கு அண்மித்ததாக புத்தூர் வீதியின் மட்டுவில் வடக்குப் பகுதியில் மருதமரங்களும், புளியமரங்களும் சூழ்ந்துள்ள நிலப்பரப்பிலே அழகான முறையில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த ஆலயம் மகிமையும், மகத்துவமும் புனிதமும் புண்ணியமும் மிக்க திருத்தலமாகும்.

முன்னொரு காலத்தில் பனையோலைகளால் வேயப்பட்ட ஒரு சிறு குடிலாக இருந்ததாக கூறப்படும் இவ்வாலயம் ஏழை எளியவர்களால் பக்திபூர்வமாக பராமரிக்கப்பட்டு வந்தது. ஒருமுறை ஓர் அடியவன் தன்னுடைய விவசாயப் பயிர்களை நாசஞ்செய்த பசுமாட்டைத் துரத்தி எறிந்து விரட்டிய பொழுது தவறுதலாக நோவு ஏற்பட்டு அது இறந்து விட்டதாம்.

இது தொடர்பாக அந்த விவசாய அடியவனுக்கு எதிராக பசுமாடு இறந்தமையைக் குற்றமாகக் கூறி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பஞ்சாயத்து விசாரணையில் விளக்கத்துக்கு வந்தபோது அவ் விவசாயி மீது குற்றமென்று தீர்ப்பளிக்கப்பட்டதாம்.

இதனை அறிந்து அந்த ஏழை விவசாயி செய்வதறியாது திகைத்துத்தான் அன்றாடம் வழிபாடியற்றிப் பூசித்து வருகின்ற அம்பாளைப் பார்த்து "தாயே! நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும். நீயே தான் எனக்கு அபயம் அம்மா" என்று வணங்கி அழுதுதொழுது நின்றானாம்.

இந்த வழக்குக்குப் பொறுப்பான பஞ்சாயத்துச் சபையினர் மாட்டைப் புதைத்த இடத்தைத் தோண்டிப் பார்த்தபோது அங்கே மாட்டுத்தலைக்குப் பதிலாக பன்றித்தலையே காணப்பட்டதாம்.


அதனால் விவசாயி, குற்றத்தண்டனையிலிருந்து நீக்கப்பட்டானாம். ஏனெனில் அம்மனின் அருளால் மாட்டின் தலை பன்றித் தலையாகக் காணப்பட்ட தேயாகும். இவனுடைய பக்தியின் காரணமாக அம்மன் அருள்செய்து மாட்டுத் தலையைப் பன்றித்தலையாக மாற்றித் தன்னுடைய பக்தனைக் காப்பாற்றிய தன்மையால் அன்று முதல் இந்த மட்டுவில் வாழ் அன்னைக்குப் 'பன்றித்தலைச்சி அம்மன்' என்ற காரணப் பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அந்த நாள் முதலாக இந்த மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் பிரசித்தமடைந்து ஒவ்வொரு பங்குனித் திங்களிலும் பொங்கல் பொங்கிப் படைதது வழிபடும் வழக்கம் ஆரம்பித்ததாகவும், ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் அம்மன அடியார்கள் இங்கு வந்து அன்னையை தொழுது வணங்கி உருகி நிற்பதாகவும் சொல்லப்படுகிறது. அது மாத்திரமன்றி அடியார்கள் பலர் ஒன்று சேர்ந்து அம்பிகையின் தெய்வீக சிலம்பு கூறும் பெருமைகளை புகழ்கின்ற ஏடுகளை எடுத்து கோவிலின் வாசலிலே பக்தி சிரத்தையுடன் மத்தளம் சல்லாரி, உடுக்கு சகிதம் பாட்டுப்பாடி அம்மனின் வரலாற்றை பண்ணிசைக்க பலர் சூழ இருந்து கேட்பார்கள். இப்பாட்டுக்கள் ஏட்டுவடிவில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

அத்தகைய புதுமைவாய்ந்த பன்றித் தலைச்சி அம்பாளின் பத்ம மலர்ப்பாதம் பணிந்து அவளது திருவருளுக்குப் பாத்திரமாகி எல்லாப் பேறுகளையும் எய்தி நல்வாழ்வுக்கு வழி வகுப்போமாக.

*கலாபூஷணம்*
*இராசையா ஸ்ரீதரன்*

# அணு ஆயுதம் தாக்காத நகரமாக புதுடில்லியை மாற்றத் திட்டம்




அணு ஆயுத தாக்குதலில் இருந்து பாதுகாக்கப்பட்ட நகரமாக மாற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

மத்திய அரசு புதுடில்லியை அணு ஆயுத ஏவுகணையில் இருந்து காத்துக்கொள்ள தடுப்பு ஒன்றினை அமைக்கும் பணியை துவக்கியுள்ளது. இந்தப் புதிய திட்டத்தின் மூலம், தொலை தூர ஏவுகணையைக் கண்டறியும் றாடர் நிறுவப்படும் என்றும் அணு ஆயுத ஏவுகணை தாக்க வந்தால், 800 கி.மீ தூரத்திற்கு முன்பே அதை கண்டறிந்து, ஏவுகணையை செயல இழக்கச் செய்ய முடியும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

மேலும் இதனை மேம்படுத்தி, ஏவுகணையை 5 ஆயிரம் கி.மீ. தொலைவுக்கு முன்பே கண்காணித்து செயல் இழக்கச் செய்ய முடியும் எனவும் கூறப்பட்டுள்ளது. இந்தத்திட்டத்திற்கான பணிகள், எதிர்வரும் 2016ஆம் ஆண்டில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்தத் திட்டம் டில்லியில் நிறுவப்பட்டதும் அடுத்து மும்பை நகரிலும் செயல்படுத்தப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. மேலும், இது போன்ற அணு ஆயுதத்தடுப்பு சாதனங்கள் உலக நகரங்களான வொஷிங்டன், பாரீஸ், பீஜீங், லண்டன் ஆகிய சில நகரங்களில் மட்டுமே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# கென்ய பல்கலை தாக்குதல் 5 சந்தேக நபர்கள் கைது



கென்ய பல்கலைக்கழகம் தாக்கப்பட்டதற்கு காரணமாக சந்தேகப்படும் 5 நபர்களை கென்யா பொலிஸார் கைது செய்துள்ளனர். கென்யாவின் கரிசா நகரில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்திற்குள் கடந்த வெள்ளிக்கிழமை புகுந்த 5 தீவிரவாதிகள், அங்கிருந்த சுமார் 150 பேரை சுட்டுக்கொன்றனர். இவர்களில் பெரும்பாலானோர் மாணவர்கள் ஆவர்.

கென்யாவிலிருந்து சோமாலியாவிற்கு தப்பித்த 5 பேரை கைது செய்துள்ளதாகவும், தாக்குதலுக்கு அவர்கள் காரணமாக இருக்கக்கூடும் என்பதால் அவர்களிடம் விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தத் தாக்குதல் நடந்தபோது உயிருக்குப் பயந்து தப்பியோடிய சிலர் பல்கலைக் கழகத்திற்கு உள்ளேயே மறைவிடங்களில் தங்கியது தெரியவந்துள்ளது.

மேலும், பல்கலைக்கழகத்தில் நடந்த இந்த கொடூர தாக்குதலுக்கு அல்-கொய்தா தீவிரவாத இயக்கத்தின் ஒரு அமைப்பினர் பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மலேஷிய முன்னாள் அமைச்சர் ஹெலி விபத்தில் உயிரிழப்பு



மலேஷியாவின் வடக்கு குவாண்டன் நகரிலிருந்து புறப்பட்ட ஹெலிகொப்டர் விழுந்து விபத்துக்குள்ளாகியது. இதில் பயணித்த அந்நாட்டு பிரதமர் நஜிப் ரசாக்கின் உதவியாளர் அலியாஸ் உட்பட 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

மலேஷியப் பிரதமர் நஜீப் ரசாக்கின் மகளுடைய திருமணத்திற்கு ஹெலிகொப்டரில் சென்றிருந்த 6 பேரும், திருமணம் முடிந்து வந்து கொண்டிருந்த போது, செமினியா நகரில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. விபத்துக்குள்ளான ஹெலிகொப்டரில் பயணித்த முன்னாள் மலேஷிய அமைச்சர் உட்பட விமானத்தில் பயணித்த 6 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக மலேஷிய போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடும் மழை காரணமாக ஹெலிகொப்டர் நடுவானில் வெடித்து சிதறியதாக சம்பவத்தை நேரில் பார்த்த நபரொருவர் கூறியுள்ளார். எனினும் இந்த விபத்து குறித்து, உடனடியாக விசாரணையை மேற்கொள்ளுமாறு அந்நாட்டு பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

# 104 வயது தோற்றத்துடன் இறந்த 17 வயதுச் சிறுமி



இங்கிலாந்தில் 'ப்ரோகேரியா' எனப்படும் வயது மூப்பு நோயால் பாதிக்கப்பட்டிருந்த ஹேய்லே ஒகினெஸ் (வயது-17) இளம்பெண் 104 வயது தோற்றத்துடன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

தெற்கு இங்கிலாந்தின் கிழக்கு சஸ்ஸெக்ஸ் நகரின் அருகேயுள்ள பெக்ஸ்ஹில் பகுதியைச் சேர்ந்த ஹேய்லே ஒகினெஸ் கொடிய நோயான 'ப்ரோகேரியா' எனப்படும் வயது மூப்பு நோயால் பிறவியில் இருந்தே பாதிக்கப்பட் டிருந்தார்.

இந்த வினோத நோயால் பாதிக்கப்பட்டவர்கள் சராசரி மனிதர்களைவிட 8 மடங்கு அதிகமாக வயது மூப்பை அடைந்து விடுவார்கள். அதாவது, இவர்களுக்கு 10 வயதாகும் போதே 80 வயதை அடைந்தவர்களுக்குரிய உடல் தளர்ச்சியையும், முதுமையையும் அடைந்தது போல தோற்றமளிப்பார்கள். மேலும், இந்த நோயினால் தாக்கப்பட்டவர்கள், சராசரியாக 13 வயது வரை மட்டுமே உயிர் வாழ முடியும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த நோயை குணப்படுத்தும் மருந்துகளை கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கு, தங்களது கண்டுபிடிப்புகளை பயன்படுத்தி ஆய்வு செய்ய தன்னையே ஆய்வுப் பொருளாக ஹேய்லே ஒகினெஸ் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னர், "காலத்தை கடந்த எனது மூப்பு" என்ற தலைப்பில் தனது வாழ்க்கை வரலாற்றை இவர் புத்தகமாக எழுதியதன் மூலம், ஹேய்லே ஒகினெஸ் மிகவும் பிரபலம் அடைந்தார். இதையடுத்து, உலகளவில் "ப்ரோகேரியா" தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நல்லெண்ண தூதராகவும் ஹேய்லே ஒகினெஸ் செயல்பட்டு வந்தார்.

இவரது மருத்துவ சிகிச்சைக்கு கருணை மனமும், ஈகைக் குணமும் கொண்ட பலர் நிதியுதவி அளித்து வந்த நிலையில், தனது 17 வயதில் ஹேய்லே ஒகினெஸ் இயற்கையோடு இணைந்து விட்டதாக இவரது தாயார் அறிவித்துள்ளார்.

இந்த அளவு விளம்பரத்திற்கு

1000/= ரூபா மட்டுமே

# பாலைவனத்தில் வெள்ளம்



வறட்சியும் சிலி நாட்டுக்கு சிக்கலை ஏற்படுத்தியிருக்கும் நிலையில் இந்த வெள்ளம் அந்நாட்டு மக்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

சிலியின் அடகமா பாலைவனப் பகுதியில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தின் காரணமாக, இதுவரை 25 பேர் உயிரிழந்துள்ளதுடன் 101 பேர் காணாமற் போயுள்ளனர். கடந்த வாரம் அங்கு பெய்த கடும் மழை காரணமாக, தாழ்வாக இருந்த பள்ளத்தாக்குப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியது. காற்றுடன் கூடிய மழையின் காரணமாக, வீதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் தொலைத்தொடர்பு வசதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

30 ஆயிரம் பேர்வரை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 2 ஆயிரத்து 700 பேரின் வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக கடந்த வெள்ளியன்று தேசிய அவசரகால அலுவலகம் வெளியிட்டுள்ள புள்ளி விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே தென்பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயும்

## கு. அழகிரிசாமி...

வரலாற்றைப் பதிவு செய்யும் பழக்கம் இல்லாத நமக்கு, இந்தக் கதைகள் கால எந்திரத்தில் பின்னோக்கிச் செல்வதான அனுபவத்தையும் தருகின்றன.

அழகிரிசாமியின் 'பிரபலமான சிறுகதையான 'ராஜா வந்திருக்கிறார்', உலகின் மிகச் சிறந்த நூறு கதைகளில் ஒன்றாக வரக்கூடியது. மானுட அறத்தைப் பற்றிப் பேசும் கதை அது. அதைப் படித்த பிறகு, ஒருவர் முன்பு இருந்ததைப்போலவே இருந்துவிட முடியாது. அவரது ஆளுமையிலேயே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய கதை அது.

கு.அழகிரிசாமி இந்தக் கதைகளையெல்லாம் எந்தெந்த ஆண்டுகளில் எழுதினார், மலேஷியாவில் ஐந்து ஆண்டுகள் வாழ்ந்த காலத்தில் அவர் என்ன செய்தார், ஏன் அந்தக் காலகட்டம் (1952-57) பற்றி அவர் எதுவுமே எழுதவில்லை என்றெல்லாம் பல கேள்விகள் என்னுள் எழுகின்றன. அதையெல்லாம் ஒரு ஆய்வாளர்தான் சொல்ல வேண்டும். அத்தகைய ஆய்வாளருக்காக, கு.அழகிரிசாமியின் எழுத்தும் வாழ்க்கையும் காத்திருக்கின்றன.

# உணர்ச்சிப் பேச்சுக்களே தீர்வு தடைப்படக் காரணம்

## பாலபத்மநாதக் குருக்கள் சொல்கிறார்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கொள்கையை அடியொற்றியதாக இன்றைய மாற்று தமிழ் அரசியல் கட்சிகள் தமது கொள்கைகளாக பின்பற்றி வருகின்றனர் என பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் பாலபத்மநாதக் குருக்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

'உண்மையான மாற்றம்' என்ற தொனிப்பொருளில் தொகுதிவாரியாக கட்சியின் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பின் தொடர்ச்சியாக வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) தொகுதிக்கான சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியம் பேசும் மாற்று தமிழ்க்கட்சிகள் தற்போது தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற பதங்களை முன்வைத்து தமது அரசியலை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆனால் இந்த மாற்றுத் தமிழ்க் கட்சிகள் ஒரு விடயத்தை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின், 'மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி' என்ற கொள்கைக்குள்ளேயே தமிழ்க்கட்சிகளால் முன்வைக்கப்படுகின்ற தாயகம், தேசியம், சுயநிர்ணயம் போன்ற பதங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், தமிழர்களின் பிரச்சினைக்கு உரிய வகையில் தீர்வினை காணமுடியாமல் போனமைக்கு அவர்களது உணர்ச்சிப் பேச்சுக்களும், உசுப்பேற்றல்களும் தான் காரணமாக அமைந்தது என்றும், பிரச்சினைகளுக்கு தீர்வுகாண விருப்பம் இல்லாத இவர்கள் நடைமுறை சாத்தியமற்ற தேர்தல் வாக்குறுதிகளை வழங்கி வெற்றி பெற்ற போதிலும் இவர்களால் மக்களுக்கு ஒருபோதும் எதையும் பெற்றுத்தர முடியாது என்றும் தெரிவித்தார்.

மத்திய அரசுடன் மட்டுமல்ல சிங்கள மக்களுடனும் நல்லுறவை பேணுவதன் ஊடாகவே இந்நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு உரிய வகையில் தீர்வு காண முடியும்.

இதனை விடுத்து தமிழ்த் தேசியவாதிகள் தற்போது இனவாதம் பேசி மக்களை குழப்பிவரும் அதேவேளை தாமும் குழப்பத்திற்குள்ளாகி வருகின்றனர்.

இருந்தபோதிலும் நீண்டகால தமிழர் அரசியல் வரலாற்றில் தமிழ்பேசும் மக்களுக்காக அர்ப்பணிப்புடனும் அக்கறையுடனும் இற்றைவரை உழைத்து கொண்டிருப்பவர் டக்ளஸ் தேவானந்தா என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதுமட்டுமன்றி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆரம்பகாலந்தொட்டு தமக்கு கிடைத்த நிதி வளங்களையும் வாய்ப்புக்களையும் மக்களது உச்ச பயன்பாட்டிற்காகவும், நலன்சார்ந்த விடயங்களுக்காகவுமே செலவிட்டும் பயன்படுத்தியும் உள்ளார்கள் என்றும் இவ்வாறானதொரு நிலையில் தமிழ் மக்களுக்கு கிடைத்த சிறந்த அரசியல் தலைவராக டக்ளஸ் தேவானந்தா மட்டுமே விளங்கி வருகின்றார் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதில் தற்போதைய அரசின் நிலைப்பாடும் மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினால் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பாக செயலாளர் நாயகம் தெளிவுபடுத்தி இருந்தார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் (றங்கன்), கட்சியின் கரையோர அமைப்பாளர் இரட்ணகுமார் வல்வெட்டித்துறை நகரசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி. கைலாயினி ஆகியோருடன் எமிலியாம்பிள்ளை, சூரியகுமாரன், அருள்தாஸ், யோகராஜன் உள்ளிட்ட கட்சியின் வடமராட்சி முக்கியஸ்தர்கள் உடனிருந்தனர்.

# மாணவர் அனுமதியில் முறைகேடு விபரம் கோருகிறது உயர்நீதிமன்றம்

நாட்டின் 13 பாடசாலைகளில் மாணவர்களை அனுமதித்தமை தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாணவர்களின் அனுமதி தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட பல நபர்கள் தாக்கல் செய்த மனுவை விசாரித்த போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு முதல் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரை பிள்ளைகளைச் சேர்த்த முறை, பிள்ளைகள் பற்றிய தகவல்களையே சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் நாட்டின் பிரபல பாடசாலைகள் 13 இற்கு உத்தரவிட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரியசாத் டெப், பிரியந்த ஜயவர்த்தன, உபாலி அபேரத்ன ஆகியோர் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

### 19 ஆம் திருத்தம் மீதான

# நாடாளுமன்ற விவாதம் யாப்புக்கு முரணானது

## ஜி.எல்.பீரிஸ் சொல்கிறார்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்டுள்ள 19ஆவது திருத்தச் சட்டமூலம் மீது எதிர்வரும் 9 ஆம் திகதி நாடாளுமன்றில் நடக்கவிருக்கும் விவாதம் அரசியல் யாப்பிற்கு முரணானது என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு விவாதம் நடத்தப்பட்டால் அது மக்களின் உரிமைகளை மீறும் செயலாகவே கணிக்கப்படும் என்றும் அவர் நேற்று கூறியுள்ளார். 19ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அவர், இது குறித்து சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எதிர்வரும் சில தினங்களில் சபாநாயகரை சந்தித்து விளக்கமளிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கடலில் மூழ்கி...

குறித்த இளைஞரைக் காணவில்லை. இது தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாரிடம் தெரியப்படுத்தி பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். பின்னர் காலை கடலுக்குச் சென்ற மீனவர்கள் குறித்த இளைஞனை சடலமாக மீட்டனர்.

அத்தோடு இவருடன் குளிக்கச் சென்ற 11 நண்பர்களையும் அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்ததோடு மேலதிக விசாரணைகளை மேற்கொள்கின்றனர். (ப)

## புளியம்குளத்தில்...

மும் வைத்தியசாலை யில் ஒப்படைக்கப்பட்டது. புளியங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்திவருகின்றனர். பிக்கப் வாகனத்தைச் செலுத்திவந்தவர் மதுபோதையில் காணப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

## அமெரிக்க...

சிறிசேனவுடன் இணைந்து செயற்படுவதற்கு தாம் எதிர்பார்ப்பதாக, அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் முன்னர் கூறியிருந்தார். இதற்கு இலங்கை அரசும் பச்சைக்கொடி காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## டெங்கு...

மட்டும் டெங்கு ஒழிப்புத் திட்டத்தை நடைமுறைப் படுத்தாது மக்கள் நலன்சார்ந்து நோயின் தாக்கத்திலிருந்து மக்களைக் காக்கும் பொருட்டு மருத்துவத்துறை சார்ந்த பல ரும் இடைவிடாது தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடனும் உழைக்க வேண்டும் என்றுத் கேட்டுக் கொண்டார்.

இவ்வாறு தொடர்ச்சியான நடவடிக்கைகளுக்கு ஊடாகவே டெங்கு எனும் கொடிய நோய்த் தாக்கத்திலிருந்து மக்களை பாதுகாக்க முடியும் என்றும் அதற்கு நாம் முழுமையான ஒத்துழைப்பும் ஒத்தாசையும் வழங்க தயாராக இருக்கின்றோம் என்றும் டக்ளஸ் தேவானந்தா உறுதிபடத் தெரிவித்துள்ளார்

நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வாரம் கடந்த மார்ச் 26 ஆம் திகதி முதல் ஏப்ரல் முதலாம் திகதி வரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த நிலையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

## யாழ்.நகரில்..

பாதுகாப்பு அமையம், விதை குழுமம் ஆகியன இணைந்து. இந்த பேரணியை ஏற்பாடு செய்துள்ளனர். இந்த பேரணி நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பேரணி யாழ். கோவில் வீதி வழியாக வடமாகாண முதலமைச்சர் காரியாலயத்திற்குச் சென்று அங்கு முதலமைச்சரிடம் மகஜரை கையளிக்கவுள்ளதுடன், வடமாகாண ஆளுநர் மற்றும் அரசாங்க அதிபர் உள்ளிட்டவர்களிடம் மகஜர்களைக் கையளிக்கவுள்ளனர்.

அந்த பேரணியின் போது, வடமாகாண சபையினால் வெளியிடப்பட்ட 40 கிணறுகளின் பரிசோதனை அறிக்கை தெளிவின்மையினால் மக்கள் மத்தியில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. அதனடிப்படையில், குறித்த குடிநீரை மக்கள் குடிக்கலாமா, கூடாதா? என்ற கேள்விக்கு பதிலளிக்குமாறு கோரி இந்த பேரணியினை முன்னெடுக்கவுள்ளனர்.

இந்தப் பேரணியில் அனைவரினது ஒத்துழைப்பினையும் வழங்குமாறும் இந்த அமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (25)

## மைத்திரி...

பதியின் இந்த விஜயத்தின் போது பாகிஸ்தானின் உயர்மட்ட அதிகாரிகளுடன் உத்தியோகபூர்வ சந்திப்புக்கள் மற்றும் இருதரப்பு விவாதங்கள் இன்று இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக விளையாட்டு, கப்பல் போக்குவரத்து, அணுசக்தி போன்ற துறைகள் உள்ளிட்ட ஆறு ஒப்பந்தங்களில் இரு நாடுகள் இடையே ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் பொருளாதாரம் உள்ளிட்ட பலதுறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மேலும் வலுவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## படைவீரர்...

டுள்ளது. இவர், தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## பெண்கள் புனர்...

வசதிகளைக்கூட பூர்த்திசெய்து கொள்ள முடியாமல் அவர்கள் நிர்க்கதிக் குள்ளாகியிருக்கின்றனர்.

வாழ்வாதார அபிவிருத்திக்காக வழங் கப்படும் ரூபா 35000 அடிப்படைக் கடன் தொகையானது இந்தக் குடும்பங் களைக் கட்டியெழுப்புவதற்கு எந்த வகையிலும் போதாமல் இருப்பதுடன் அந்தக் கடனை அன்றாடத் தேவை களுக்காக செலவு செய்திருப்பதையும் அறிய முடிகின்றது. இந்தப் பெண்களுக்கு கடனுதவியைப் பெற்றுக்கொடுப்பதற்கு வங்கிகள்கூட பின்வாங்குகின்றன. அதனால் வருமானத்தை ஈட்டுவதற்கான செயற்பாடுகளுக்கு அதிகளவிலான உத்விகள் தேவைப்படுகின்றன.

சட்ட விரோத மதுபானப் பாவனை, போதைப் பொருட்பாவனை என்பன அதிகரித்து வருவத்னால் வீட்டினுள் வன்முறைகள் அதிகரித்து வருவதும் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாகுவதும் அவர்கள் முகங்கொடுக்கும் பாரிய பிரச்சினைகளாகும். பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழியில் பணியாற்றக்கூடிய பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறைந்த எண்ணிக்கையில் இருப்பதனால் இது சம்பந்தமாக முறைப்பாடுகளை முன்வைப்பதிலும் சட்ட ரீதியான பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வதிலும் பிரச்சினை நிலவுகின்றது.

இந்த நிலைமை சம்பந்தமாக தனது விசேட கவனத்தை ஈர்த்த பிரதம அமைச்சர் கிளிநொச்சியில் தாபிக்கப்படும் தேசிய நிலையமானது இந்த மனிதாபிமான ரீதியான பிரச்சினைகளைத் தீர்ப் பதற்கான அடிப்படை நடவடிக்கையாக இருக்குமென நம்பிக்கை தெரிவித்தார்.

பெண்கள் தலைமைத்துவம் வகிக்கும் குடும்பங்கள் முகங்கொடுக்கும் பிரச்சினை கள் சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் அமைப்பு சமர்ப்பித்துள்ள அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அக்குடும்பங்களின் சமூக, பொருளாதார மட்டத்தை உயர்த்துவதற்குத் தேவையான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக பிரதம அமைச்சர் குழுவொன்றை நியமித்துள்ளார். அதன் தலைவராக சட்டத்தரணி திருமதி சாந்தினி அபிமானசிங்கம் பணியாற்றுவார்.

இதற்காக, மகளிர் விவகார அமைச்சும் கொள்கை உருவாக்கம், பொருளாதார அலுவல்கள், சிறுவர், இளைஞர் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சும் இணைந்து நிதியைப் பெற்றுக் கொடுப்பதுடன் மீள்குடியேற்ற அமைச்சும் தேவையான ஒத்துழைப்பை வழங்கும் என்று அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பாகிஸ்தானுக்கு நேற்று விஜயம் செய்த இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அந்நாட்டின் பிரதமர் நவாஸ்ஷரீப் வரவேற்பதைக் காணலாம்.

# கூட்டமைப்பின் இரட்டை வேட அரசியல் தமிழ் மக்களுக்கு விமோசனம் தராது

## முன்னாள் அதிபர் பாலசுப்பிரமணியம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தற்போது இரட்டை வேடம் போடும் அரசியலை முன்னெடுத்து வருவதுடன் தாமும் குழம்பி மக்களையும் குழப்பி வருகின்றனர் என மட்டுவில் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

உண்மையான மாற்றம் என்ற தொனிப்பொருளில் தொகுதிவாரியாக கட்சியின் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பின் தொடர்ச்சியாக தென்மராட்சி தொகுதிக்கான நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தற்போது எதிர்ப்பும் இணக்கமும் இல்லாத இரட்டை வேட அரசியலையே முன்னெடுத்து வருகின்றனர். இதனூடாக அவர்களது தீர்க்க தரிசனம் அற்றதும் உண்மைத் தன்மை அற்றதுமான. அரசியல் நிலைப்பாடு வெளிப்பட்டு நிற்கின்றது.

கூட்டமைப்புக்குள்ளேயே மாறுபட்ட கருத்துக்கள் உள்ள நிலையில் தாமும் குழம்பி மக்களையும் குழப்பி வருகின்ற நிலையே தற்போது காணப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் தென்மராட்சிப் பகுதியில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்களில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி யின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் தெரிவித்தார்.

இதில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கருத்துரையாற்றும் போது, அண்மையில் வலி.கிழக்கு மற்றும் வலி.வடக்குப் பகுதிகளில் மக்களின் மீள்குடியேற்றத்திற்காக காணிகள் மீளளிக்கப்பட்டமையானது ஆரம்ப காலங்களில் நாம் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாகவே சாத்தியப்பட்டுள்ளது.

ஆனால் இன்று அதற்கு பலரும் உரிமை கோருகின்றனர். முன்னைய அரசுகளுடன் நாம் உறவுக்கு கரமும் உரிமைக்குக் குரலும் கொடுத்திருந்த நிலை யில் தற்போது உரிமைக்குக் குரலும் உறவுக்கு கரமும் கொடுத்து வருகின்றோம்.

கடந்த காலங்களில் தவறான அரசியல் தலைமைகளால் தான் எமது சமூகம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டது. அந்நிலையை மாற்றி மக்கள் தமது சொந்தக் கால்களில் நின்று உழைத்து உயர்வு காண வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராசா மகேஸ்வரன் ஆகியோரது படுகொலைக ளுக்கும் எமது கட்சிக்கும் எவ்விதமான தொடர்புகள் இல்லையென்று தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் சாவகச்சேரியில் நிகழ்ந்த கபில் நாத்தின் படுகொலை தொடர் பான உண்மைத் தகவல்களும் விரைவில் வெளிவருமென்றும் தெரிவித்தார.

இதேபோன்று தான் ஏனைய படுகொலைகள் தொடர்பிலும் உண்மைத் தகவல்கள் வெளிப்படுத்தப்படும் என்றும் அதன் மூலம் மக்கள் உண்மைகளை புரிந்து கொள்வார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் சூசைமுத்து அலெக்சாண்டர் (சாள்ஸ்), வடமராட்சி அமைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் உள்ளிட்ட கட்சியின் தென்மராட்சி பிரதேசத்தின் முக்கிய பிரதிநிதிகளும் உடனிருந்தனர்.



# மிதிவெடியில் சிக்கி படைவீரர் மூவர் காயம்

மடு, பண்டிவிரிச்சான் பகுதியில் அகற்றப்பட்ட மிதிவெடிகளை செயலிழக்கச் செய்யும் போது அவற்றிலொன்று தவறுதலாக வெடித்ததில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மடு, பண்டிவிரிச்சான் பகுதியில் உள்ள கண்ணிவெடிகள் தனியார் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் அகற்றப்பட்டு வருகிறன. இவ்வாறு அகற்றப்பட்ட கண்ணிவெடிகளை இராணுவத்தினர் செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது மிதிவெடியொன்று தவறுதலாக வெடித்துள்ளது. இதில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்தனர்.

# தடம்புரண்டது ரயில்



(ஹட்டன்)

நாவலப்பிட்டியிலிருந்து கொட்டகலைக்கு எண்ணெய் கொள்கலன்களை ஏற்றிச் சென்ற ரயில் வட்டவளை ரயில் நிலையத்துக்கருகில் தடம்புரண்டுள்ளது.

வட்டவளைப்பகுதியில் எண்ணெய் கொள்கலன்களை ஏற்றி சென்ற ரயில்வண்டி நேற்று அதிகாலை 2 மணியளவில் தடம் புரண்டுள்ளது.

நாவலப்பிட்டியில் இருந்து ஹட்டன் நோக்கி பயணித்த எண்ணெய் கொள்கலன் ரயில் வண்டியே இவ்வாறு தடம் புரண்டுள்ளது.

இதனால் கண்டியில் இருந்து ஹட்டன் நோக்கிய புகையிரத போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன் கொழும்பில் இருந்து பதுளை நோக்கியும் பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிய ரயில் போக்குவரத்து பாதையானது மாற்றப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி புகையிரத உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

# வீதி விபத்துக்களில் சிக்கி மூன்று பேர் படுகாயம்



(வவுனியா)

வவுனியா, புளியங்குளம், ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இரு வேறு விபத்துக்களில் மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டனர்.

வவுனியா, புளியங்குளம் சந்திக்கு அண்மையில் ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் இரவு பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியில் நின்ற மாட்டுடன் மோதியதில் புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் காயமடைந்து புளியங்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட டுள்ளார்.

இதேவேளை, வவுனியா, புளியங்குளம் பகுதியில் நேற்றுக் அதிகாலை 6 மணியளவில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த சிறிய டொல்பின் ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியின் கரையில் இருந்த மதவுடன் மோதி சுமார் 10 மீற்றர் தூரத்திற்கு தூக்கி வீசப்பட்டது.

இந்த விபத்தில் வாகனத்தில் பயணித்த இருவரும் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இவை தொடர்பான விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சம்பூர் பொருளாதார வலய காணியை விடுவிக்க ஏற்பாடுகள் மும்முரம்

(கொழும்பு)

பொருளாதார வலயம் நிர்மாணிப்பதற்காக இலங்கை அரசாங்கத்தால் முதலீட்டு சபைக்காக சுவீகரிக்கப்பட்ட சம்பூர் மக்களுக்குச் சொந்தமான 818 ஏக்கர் நிலத்தின் முதலீட்டு சபைககான உரிமம் இரத்து செய்யும் வர்த்தமானி அறிவித்தல் இம்மாதம் 17 ஆம் திகதி வெளிவரவிருக்கிறது.

காணி அமைச்சின் செயலாளர இவ்வர்த்தமானி அறிவித்தலை மேற்கொள்ள விருக்கிறார் என உயர் அதிகாரி ஒருவர் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இவ்வறிவித்தலைத் தொடர்ந்து மேற்படி காணிகள் இம்மாத இறுதிக்குள் சம்பூர் மக்களுக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளன.

கடந்த 2006ஆம் ஆண்டில் யுத்த நடவடிக்கை காரணமாக சம்பூர் மக்கள் இடம்பெயர வைக்கப்பட்டனர். மக்கள் செறிவாக குடியிருந்த சம்பூர் நகர் பகுதியிலுள்ள 237 ஏக்கர் நிலத்தை இலங்கை அரசாங்கம் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தி அப்பகுதியில் கடற்படை முகாமை அமைத்தது. எதிர்வரும் ஏப்ரல் 30ஆம்திகதி 244 குடும்பங்கள் குடியேற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ள காணியும் உயர்பாதுகாப்பு வலயமாக கடற்படையினர் முகாமிட்டுள்ள பகுதியும் இதன் போது திருப்பி வழங்கப்படவில்லை என்றே முக்கியமானது.

சம்பூர் பகுதியில் சுமார் அறுநூறு குடும்பங்கள் தற்போது உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதியைச் சேர்ந்தவர்கள். ஏனைய 818 ஏக்கர் காணியில் சுமார் 300 குடும்பங்களே வசித்து வந்துள்ளனர்.

இதைத் தவிர அனல் மின் நிலையத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணியும் மக்களின் மீள்குடியேற்றத்திற்காக விடுவிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

818ஏக்கர் நிலத்தை விடுவிப்பதை வரவேற்றுள்ள மக்கள் தமது கிராமத்தை, ஒட்டுமொத்த கிராமத்தையும் விடுவிக்க வேண்டும் எனக் கோரியுள்ளனர்.



# மயிரிழையில் தப்பியது ஏயர் இந்திய விமானம்

அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்குச் சென்ற ஏயர் இந்திய விமான சேவைக்குச் சொந்தமான விமானம் ஒன்று அவசரமாக தரையிறக்கம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூஜெர்சியில் இருந்து 250 பயணிகளுடன் டில்லி நோக்கிப் பயணித்த குறித்த விமானம் புறப்பட்ட 2 மணிநேரத்திலேயே நிவார்க் பகுதியில் அவசரமாக தரையிறக்கப்பட்டது. தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதை அறிந்து கொண்ட விமானத்தின் விமானி சாதுரியமாக விமானத்தை தரையிறக்கியுள்ளார்.

இதனால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டுள்ளதுடன், பயணிகள் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டு பிறிதொரு விமானத்தில அனுப்பி வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஏப்ரல் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.